பக்கங்கள் - 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 20 சனிக்கிழமை 04.03.2023 கதிர் 115

OKAYA Authorized & Exclusive Distributor in Sri lanka
REC solis JinKO Solar XSOLAX
dsl We lead the way...!

## மார்ச் 3-5, 2023 யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் கொள்முதல் செய்யும் ஒவ்வொரு 5 kW Solar System இக்கும் மின்சார Scooter இலவசம்



மின்சார scooter Free

LED 15 TV 2 Wifi 2
3 1 1
6 CCTV 8 1




| | |
|---|---|
| DSL Solar 3 kW System | Rs.1,140,000/= |
| DSL Solar 5 kW System | Rs.2,162,000/= |
| DSL Solar 10 kW System | Rs.3,075,000/= |

| | |
|---|---|
| DSL Solar 5 kW System + EV Free | Rs.2,687,000/= |
| For Okaya Backup (kW) | Rs. 310,000/= |

**5000VA**
4000 W Inverter +
3960 W Solar Pannels + ST200H Battery

douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha ,
Colombo 10

077 307 8799 I 070 163 0209 I 070 789 2311
www.dslsolarenergy.com


YARL SMART
Water Solution
"Smart Water, Smart Life"
Yarl Smart Water Solution
அதிரடி விலைக்கழிவு
65,000/-
40,000/-
NEXUS
OPEL
Next
No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044, | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com
நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு
தீர்வாக நாங்கள்

# காலைக்கதிர்
Kalaikkathir




இனி இது ரகசியம் அல்ல!

தேர்தலுக்கான புதிய திகதி அனேக மாதத் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக் குழுவால்

11



## வரும் புத்தாண்டுக்குள் அமைச்சரவை மாற்றம்

### எஸ்.பிக்கு உயர் கல்வி அமைச்சு

தமிழ், சிங்கள புத்தாண்டுக்குள் அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது என அரச உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய அமைச்சரவை முழுமையாக மாற்றப்படவுள்ளதுடன், சில அமைச்சுகளின் விடயதானங்களும் கைமாறவுள்ளன.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்

04

## கட்டிப்பிடித்தது ஒரு குற்றமா?

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இருவர் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் காணொலி சமூக ஊடகங்களில் பரபரப்பாகப் பரவி வருகின்றது.

காதலர்களான இந்த இரு மாணவர்களும் பொது இடத்தில் கட்டிப்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ், விசாரணை என்ற பெயரில் தாம்

04

# நாணய நிதிய பணிப்பாளருடன் ஜனாதிபதி பேச்சு

### புதிய கடன், கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராய்வு



**சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவாவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை இரவு, 'சூம்' மெய்நிகர் (ஒன்லைன்) ஊடாக, கடன் உதவி தொடர்பில் பேச்சு நடத்தினார்.**

04

## தொடர்ந்தும் தேர்தலை பிற்போடவே அரசு முயற்சி

### பவ்ரல் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை பிற்போடும் முயற்சியிலேயே ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றஞ்சாட்டியுள்ளது. தேர்தல் சட்டங்களைத் திருத்துவதன் மூலம் இதனைச் செய்வதற்கு அரசு முடிவெடுத்திருக்கின்றது என்றும் அது தெரிவித்தது.

இது தொடர்பில் வெள்ளிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசு முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது. வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும் அபாயத்தில் நாம் இருக்கிறோம். வரையறைகளை அமைத்து, அதற்கமைய மீண்டும் வேட்புமனு கோருவதற்கே அதிக வாய்ப்பு காணப்படுகிறது.

அத்தோடு இதனுடன் இணைந்ததாகவே தேர்தல் மீளாய்வுக் குழு இருக்கிறது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் பல மாதங்கள் அல்லது ஒரு வருடமேனும் பிற்போடப்படும் அபாய நிலையே இருக்கிறது.

தொகுதிகள் குறைவடைவது சாதகமாக இருந்தாலும், இதன் காரணமாக இந்த தேர்தல் கால வரையறை இல்லாமல் பிற்போகும் நிலை இருக்கிறது. இது பாரதூரமான விடயம்.

அவர்கள் எதிர்பார்க்கும் தேர்தல் காலம் வரும் வரை இந்த

04

## நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மட்டுமே அரசை மாற்ற முடியும்

### திருமலை விமானப்படைத் தள நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 04

மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரமே அரசை மாற்ற முடியும் என்றும், வீதிகள் அதற்கு மாற்றுவழியல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

06

### வரிக் கொள்கைக்கு எதிராக

## போர்க்கொடி தூக்கும் தொழிற்சங்கங்களுக்கு நடுத்தர மக்கள் மீது அக்கறையே இல்லை

### சாடுகிறார் அமைச்சர் பந்துல



அரசின் வரிக் கொள்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் தொழிற்சங்கங்கள் நாட்டின் நடுத்தர வர்க்க மக்கள் குறித்து அக்கறைகொள்ளவில்லை என்று சாடினார் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன. எல்லோரும்

04


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)

பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


## அமெரிக்காவின் 3 கோரிக்கைகள் ஜனாதிபதி ரணிலால் நிராகரிப்பு

அமெரிக்காவின் உளவுத்துறையான மத்திய புலனாய்வு முகவரமைப்பின் (சிஐஏ) தலைவர் இரகசியமாக இலங்கைக்கு வந்து திரும்பிய சம்பவத்தின் பின்னணியில் அமெரிக்காவின் கோரிக்கைகளில் மூன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் கூட்டணி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை

04

## உள்ளூர் தேர்தலை நடத்த அமெ. தலையிடவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த இந்த விடயத்தில் அமெரிக்கா தலையிடவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நல்ல நண்பர், அவர் ஊடாக இந்த விடயத்தில் அமெரிக்கா தலையிட்டு

06

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படும். உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டத்தின்படி தேர்தல் திகதியைத் தீர்மானிப்பதில் ஒரு சர்ச்சை இருக்கின்றது. எனினும் தேர்தல் அனேகமாக மார்ச் 19ஆம் திகதி நடைபெறுவதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

சட்டத்தின்படி தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு தேர்தல் திகதியை 21 நாள்களுக்கு ஒததி வைப்பதற்கான அதிகாரம் இருக்கின்றது. அதன்படி மார்ச் 9ஆம் திகதி அறிவிக்கப்பட்ட தேர்தலை மார்ச் 30ஆம் திகதிக்குள் நடத்த முடியும். ஆனால், அவசரகால நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழு அப்படித் தேர்தலை ஒத்திவைக்க முடியும். தற்போது – நாட்டில் அப்படியான அவசர கால நிலை ஏதும் இல்லாததால் ஆணைக்குழுவால் அப்படித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்று சட்டவாதிகளில் ஒரு தரப்பினரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் மார்ச் 19ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. சட்டத்தின்படி உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலத்தை அமைச்சர் ஒரு வருட காலத்திற்கு நீடித்தால் அதன் இரண்டாவது 6 மாத காலப் பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். அப்படிப் பார்த்தால் மார்ச் 19ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொ்ண்டு மார்ச் 19ஆம் திகதி அல்லது அதற்கு ஓரிரு நாள்கள் முன்னதாகத் தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

******

தேர்தல் நடக்குமா இல்லையா என்கிற சர்ச்சையைத் தொடர்ந்து "நாங்கள் தான் கூட்டமைப்பு" என்கிற உரிமை கோசம்கொஞ்சநாளாக அடங்கிப்போய்க் கிடந்தது. இனி அதை மீண்டும் தூசு தட்டி எடுத்துக்கொண்டு வருவார்கள். கூட்டமைப்பைவிட்டு யார் வெளியே போனார்கள், யார் வெளியே போகாமல் இருந்தார்கள், அந்த ஒரு வாழைப் பழம்ம் இதுதான் என்ற புளித்துப்போன அருவருப்பான கதைகளைக் கேட்க காதுகளைத் தீட்டிக்கொண்டு காத்திருங்கள். பாவம் அவர்கள், ஒற்றுமை ஒற்றுமை என்று மக்களை ஏமாற்றுவதைவிட அவர்களிடமும்தான் வேறு என்ன இருக்கிறது மக்களுக்குச் சொல்வதற்கு. அதனால் ஒன்றில் காதில் பஞ்சை அடைத்துவிட்டு இருங்கள் அல்லது காதுகளை நன்றாகக் கழுவி வைத்துக்கொண்டு இருங்கள். அப்படியென்றால் தேர்தல் நிச்சயமாக நடக்குமா என்றுகேட்டீர்களானால், அதுரணிலுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

******

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்டி நேற்றுத் தொடங்கியது. நகரில் பிரதம தபாலகத்திற்கு அருகில் உள்ள ரில்கோ விடுதியில் தொடக்க விழா நடந்தது. இதில் பிரதம விருந்தினர் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா. அவர் வருவார் வருவார் என்று காத்திருந்து பார்த்துப் பார்த்துக் களைத்துப்போய்விட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் மற்றைய விருந்தினர்களும் ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் ஆளுநர் வராமலேயே சம்பிரதாயபூர்வ தொடக்க நிகழ்ச்சியை நடத்தி முடித்துவிட்டார்கள்.

பின்னர் அங்கிருந்து கண்காட்சி நடக்கும் முற்றவெளிப் பகுதி வரைக்கும் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்போதும் கூட ஆளுநர் வந்து சேரவில்லை. ஆளுநரின் அள்ளக் கைகளுக்கு அழைப்பெடுத்தால் வந்து கொண்டிருக்கிறார், வந்து கொண்டிருக்கிறார் என்பதுதான் பதிலாக வந்ததே தவிர ஆளுநர் வந்த பாடில்லை.

ஊர்வலம் கண்காட்சியின் தொடக்க நிகழ்விடத்துக்கு வந்துவிட்டது. அங்கே நாடாவை வெட்டி கண்காட்சியைத் திறந்துவிடவேண்டும். இன்னும் ஆளுநரைக் காணவில்லை. விருந்தினர்கள் வெயிலில் கால் கடுக்கக் காத்து நின்றனர். ஆளுநர் வரவில்லை. எவ்வளவு நேரம்தான் பொறுப்பது? ஒரு ஆளுநர், அதுவும் பன்னாட்டு நேர் சீர்களோடு இயங்கக்கூடிய தொண்டு நிறுவனம் ஒன்றின் இயக்குநராக இருந்தவர், சர்வதேச அளவில் பல இராஜதந்திரிகளோடும் உயரதிகாரிகளோடும் பழகியவர் உறவாடியவர் ஆளுநர். நேர முகாமைத்துவம் குறித்தும் நிகழ்ச்சிக்கு குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்வதன் முக்கியத்துவம் குறித்தும் தெரியாதவரல்லர். ஆனாலும் அரசியல்வாதிகள் மாதிரி நிகழ்ச்சிக்கு நேரத்து வராமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது இத்தகைய குற்றச்சாட்டு உண்டு. எந்த நிகழ்ச்சிக்கும் அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒருபோதும் வந்ததில்லை என்று.

வெயிலில் நின்று நின்று பொறுமையிழந்துபோன இந்தியத் துணைத் தூதர் நட்ராஜ், அவர் (ஆளுநர்) வரும் வரைக்கும் நீங்கள் எல்லோரும் பொறுமையாக நின்றுவிட்டு வாருங்கள் நான் போகிறேன் என்றுவிட்டு மளமளவென்று தனது பரிவாரங்களோடு பார்வையாளர் நுழைவுப் பாதை வழியாக கண்காட்சிக்குள் சென்றுவிட்டார். ஏற்பாட்டாளர்களுக்கோ பெரும் சங்கடம். என்னடா இது சோதனை என்று காலில் சுடுதண்ணீர் ஊற்றிக்கொண்டு வெயிலில் நிற்பவர்களைப் போல அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். துணைத் தூதர் போய்விட்டார்.

அப்போதும் "வந்துகொண்டிருக்கிறார், வந்துகொண்டிருக்கிறார்" என்பதுதான் ஆளுநர் பக்கத்தில் இருந்து வந்த பதில். இன்னும் கொஞ்ச நேரம் கழித்து ஒரு வழியாக ஆளுநர் வந்து சேர்ந்தார். அதற்கிடையில் இந்திய துணைத் தூதர் பாதிக் கண்காட்சியைப் பார்த்து முடித்துவிட்டிருந்தார். வந்ததும் வராததுமாக நிலமையை பதுங்கிப் பதுங்கி அவருக்கு விளக்கினார்கள் ஏற்பாட்டாளர்கள்.

நாடாவை வெட்டி கண்காட்சியைத் திறக்க வந்த ஆளுநர் என்ன நினைத்தாரோ யாழ். மாவட்டச் செயலரின் கையில் கத்தரிக்கோலைக் கொடுத்து நீங்களே வெட்டித் திறந்து விடுங்கள் என்று சொல்லிவிட்டார். அவரும் வேறு வழியில்லாமல் தயங்கித் தயங்கித் திறந்து வைத்தார்.

என்ன இருந்தாலும் எல்லோரையும் காக்க வைத்த தனது அநாகரிகச் செயல் குறித்தும் ஆளுநருக்கு உள்ளுக்குள் உறுத்தியருக்கும்போல.

இதேபோல தான் இந்தப் பதவிக்குப் பொருத்தமான ஆள்தானா என்று ஒரு தடவை இருந்து சிந்தித்துப் பார்த்தாரானல் உள்ளுக்குள் உறுத்தல் என்ன உருட்டலே ஏற்படக்கூடும்.

- இடிமின்னல் -

## வரும் புத்தாண்டுக்குள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு உயர் கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதுடன், வஜிர அபேவர்த்தனவுக்கும் முக்கிய அமைச்சுப்பதவிகையளிக்கப்படவுள்ளது.

ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதமர் பதவியில் மாற்றம் வராது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதற் கட்ட கடன் கிடைக்கப் பெற்ற பின்னரே, அமைச்சரவை மறுசீரமைப்பு இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கட்டிப்பிடித்தது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட விதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த இரு மாணவர்களும் பல்கலைக் கழக செனட் கட்டடத்தின் முன்பாக இப்படி ஆரத்தழுவிக்கொண்டார்கள்.

சனாதன மந்திரா வளாகத்தில் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்ததற்காக அவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது.

உண்மையான அன்பின் அர்த்தம் என்ன என்பதை பல்கலைக்கழக மாணவர்களின் நடத்தைக் கண்காணிப்பாளரான "மார்ஷல்" அதிகாரிக்கு காட்டுவதற்காகவே தாம் பகிரங்கமாக ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துப் போராட்டம் நடத்தினர் என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாங்கள் கட்டிப்பிடித்துக் கொண்டதற்காக மார்ல் அதிகாரி தங்களை அவதூறு செய்ததுடன் இழிவான தொனியில் பேசி அவமதித்தார் எனவும், தனது மாணவர் அட்டையை எடுத்துச் சென்றதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட அந்த ஆண் மாணவர் கூறினார்.

ஒரு பல்கலைக்கழக மாணவர் எந்த இடத்திலும் நேசிக்க வேண்டிய சுதந்திரத்தின் அடையாளமாகவும், கலை நிகழ்ச்சியாகவும் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த காணொளி தொடர்பில் முகநூலில் கருத்து தெரிவித்த முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, எல்லா வகையான கலாச்சார கொள்கைகளிலிருந்தும் விடுபட்டு பேராதனை மீண்டும் பேராதனையாக மாறுவது போல் தெரிகிறது. இந்த துணிச்சலான இளம் ஜோடிக்கு நமது அன்பையும் மரியாதையையும் தெரிவிப்போம்" என்று கூறியிருந்தார்.

## நாணய நிதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தற்போது, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி வசதி தொடர்பில், அனைத்துத் தரப்பினராலும் சாதகமான மற்றும் நம்பிக்கையான பின்னணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் சீனப் பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியுள்ளார். இதன மூலம் இந்த விடயத்தில் காத்திரமான முன்னேற்றம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பதற்காக, பலதரப்பு முயற்சிகளில் பங்கேற்க சீனா தயாராகவுள்ளதாக சீனப் பிரதமர் லீ க சியாங் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளார் என்று அண்மையில், 'ப்ளூம்பேர்க்' செய்திச் சேவை, செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கை, பாகிஸ்தான் போன்று, கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கு ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதாக சீனப் பிரதமரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த மாத இறுதியில் நாணய நிதியத்தின் கடன் கிடைக்கும் என்று இலங்கை பெரிதும் எதிர்பார்த்துள்ளது. அதனடிப்படையில் டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு உயர்வு உள்ளிட்ட பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும் கடன் வழங்கல் தொடர்பான தனது உத்தியோகபூர்வ அறிவிப்பை நாணய நிதியம் இன்னும் விடவில்லை.

## தொடர்ந்தும் தேர்தலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை பிற்போடுவதற்குமே அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெற்றால் அரசாங்கத்துக்கு தோல்வி ஏற்படும் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டியதில்லை. தேர்தலில் அரசாங்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், அதனால் அரசாங்கத்தை கொண்டு செல்வதற்கு எந்த தடையும் இதன் மூலம் ஏற்படப்போவதில்லை – என்றார் அவர்.

## போர்க்கொடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டால் மட்டுமே பொருளாதார மீட்சியை விரைவில் அடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் நாடு என்றுமில்லாத வகையில் பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு மாத்திரம்தான் பொறுப்புக்கூற வேண்டும் எனக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆட்சியில் இருந்த சகல அரசுகளும் பொறுப்புக்கூறவேண்டும்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது அரசைப் பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருக்கு பலமுறை அழைப்பு விடுத்தபோதும், ஆசை ஆனால் பயம் என்பதால் அவர்கள் அரசைப் பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க அனைத்துச் சவால்களையும் பொறுப்பேற்றார். பொருளாதார மீட்சிக்காக கடந்த ஆறுமாத காலமாக அரசு எடுத்த தீர்மானங்களினால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அரசியல் காரணிகளுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் பொருளாதார காரணிகளுக்கு தற்போது முன்னுரிமை வழங்கியுள்ளோம்.

அரசின் வரிக் கொள்கைக்கு எதிராகத் தற்போது போர்க்கொடி உயர்த்தும் தொழிற்சங்கத்தினர் நடுத்தர மக்களின் பொருளாதார நிலைமை குறித்து அக்கறை கொள்ளவில்லை.. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அனைவரும் விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டும் – என்றார்.

## அமெரிக்காவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் முதனிலை பாதுகாப்பு அதிகாரிகள் ஜனவரி 14ஆம் திகதி இலங்கைக்கு வந்தார்கள். அந்தப் பயணத்தில் 22 பாதுகாப்பு அதிகாரிகளுக்கு விசேட பாதுகாப்பு மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டன, இவர்களைப் பரிசோதனை செய்ய விமான நிலைய சுங்க பிரிவினருக்குக்கூட அனுமதி வழங்கப்படவில்லை.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு வரும்போது அதிவேக பாதையில் ஏனைய வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அரச தலைவர்களுக்கு வழங்காத உயர்பட்ச பாதுகாப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பென்டகன் பாதுகாப்பு அதிகாரிகள் நாட்டுக்கு ஏன் வருகை தந்தார்கள் என அரசாங்கத்திடம் பலமுறை கேள்வி எழுப்பினோம், ஆனால் இதுவரை அரசாங்கம் பொறுப்புடன் பதிலளிக்கவில்லை. அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் வருகை தொடர்பில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம்கூட தெளிவுபடுத்தவில்லை. அமெரிக்காவின் சி.ஐ.ஏ பிரிவின் தலைவர் வில்லியன் பேர்ன்னெ இரசிய மான முறையில் இவ்வாறு நாட்டுக்கு வருகைதந்துள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சிப் பதிவுகள் ....




















காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வடக்கின் உற்பத்தித் தொழிற்றுறை வளர்ச்சியில் அக்கறை தேவை

**யாழ்ப்பாண பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியின் 13 ஆவது பதிப்பு வெள்ளிக்கிழமை தொடங்கியது. போருக்குப் பின்னரான வடக்கில் வர்த்தக தொழிற்றுறையை விரிவடையச் செய்யும் நோக்கோடுகூடிய ஒரு நல்ல செயற்றிட்டம் இவ்வளவு வெற்றிகரமாக முன்னேறியிருப்பது வரவேற்புக்குரியது.**

**கண்காட்சி தொடங்கி கிட்டத்தட்ட ஒன்றரை தசாப்தங்கள் கடந்துவிட்ட நிலையில், வடக்கின் பொருளாதார மறுமலர்ச்சி தொடர்பில் ஒரு மீளாய்வுப் பார்வையும் அவசியமாகின்றது. இந்தக் கண்காட்சியின் 13ஆவது பதிப்பிலும் வடக்கில் இருந்து வந்திருக்கக்கூடிய கூடங்களின் எண்ணிக்கையில் பெருமளவானவை உணவு உற்பத்தியைத் தளமாகக் கொண்ட சிறு நிறுவனங்களே என்பது கண்கூடு.**

**கண்காட்சி தொடங்கப்பட்ட காலத்தோடு ஒப்பிட்டால் இத்தகைய உணவு உற்பத்திச் சிறு கைத்தொழில்களில் வடக்கு சிறியளவில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்று வேண்டுமானால் திருப்திப்பட்டுக்கொள்ளலாம். அதுவும்கூட ஆரோக்கியமான உணவு உற்பத்தியா என்றால், நொறுக்குத் தீனி எனப்படும் உப உணவு உற்பத்தித்துறைதான் கொஞ்சமாவது வளர்ந்திருக்கிறது.**

**அது தவிர்ந்து சேவைத் துறையில் சில பல முன்னேற்றங்களைக் காண முடிகின்றது. ஆனால் இது கணிசமான முன்னேற்றம் என்று எடுத்துக்கொள்ளக் கூடியதல்ல. இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் இந்தக் கண்காட்சி பெரும்பாலும் பொருள் விற்பனைச் சந்தை என்கிற தளத்திலிருந்து இன்னும் பெரியளவில் இடம் பெயரவில்லையோ என்று தோன்றுகின்றது. அது அந்தக் கண்காட்சியினதோ ஏற்பாட்டாளர்களினதோ குறைபாடல்ல. போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு எவ்வளவு தூரம் தொழிற்றுறையில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதற்கான சுட்டியாகத்தான் அதனை எடுத்துக்கொள்ளவேண்டும்.**

**கடந்த 14 ஆண்டுகளில் வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்த, தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க என்ன செய்யப்பட்டிருக்கின்றது, அவற்றின் வெற்றி தோல்வி என்பவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து அடுத்த 10 ஆண்டுகளில் நாம் அடைய வேண்டிய இலக்கை நிர்ணயித்து அதற்கான வழி வரைபடத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டிய தேவையை இந்தக் கண்காட்சி உணர்த்தி நிற்கின்றது.**

**வடக்கில் தொழிற்றுறையை, உற்பத்தித் துறையை வளர்த்தெடுக்காத வரையில் இளைஞர்கள் வெளிநாடுகளை நோக்கி ஓடுவதையும் தரமான பயிற்சிபெற்ற பணியாளர் பற்றாக்குறையை வடக்கு எதிர்கொள்வதையும் தடுக்க, தவிர்க்க முடியாது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை நம்பி மட்டுமே வடக்கின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அத்தகைய ஒரு பொருளாதாரத்தின் அபாயம் எப்படியானதாக இருக்கும் என்பதை கொரோனா காலம் நமக்கு நன்கு உணர்த்தியிருக்கிறது. எனவே நாம் உற்பத்தித்துறையின் வளர்ச்சியில் வடக்கின் பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.**

**இந்தக் கண்காட்சியில் அத்தகைய ஓரிடம் வடக்கிற்கு இருக்கிறதா என்பது கேள்விக்குரியது. அடுத்த 5 வருடங்கள் கழித்தாவது வடக்கின் உற்பத்தித் தொழிற்துறையின் ஓர் அலகு பல கூடங்களுடன் இந்தக் கண்காட்சியில் இடம்பெறக்கூடியளவிற்கு நாம் திட்டமிட்டுச் செயற்படவேண்டியது அவசியம். இதை அரசும் ஆட்சியாளர்களும் செய்வார்கள் என்று காத்திருப்பது கானல் நீர். புலம்பெயர் தமிழ் வர்த்தகச் சமூகத்துடனும் தமிழ் நாட்டின் பெரும் சந்தையுடனும் இணைந்ததாக வடக்கின் உற்பத்தித் தொழிற்றுறையை கட்டியெழுப்ப இப்போதாவது அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம்.**

### அமெரிக்காவின் ....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

22 பேர் அடங்கிய இவரது குழுவினர் இலங்கையின் தேசிய பாதுகாப்பை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் நான்கு முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளனர்.

இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சகல புலனாய்வுத் தகவல்களையும், அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்ளும் வகையில் 'புலனாய்வு தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம்' ஒன்றை உருவவாக்குவது முதல் முன்மொழிவு.

இரண்டாவது அறிவியல்பூர்வ குடியகழ்வுகட்டுப்பாட்டுமுறைமையை இலங்கை விமான நிலையங்களில் நிறுவுதல், மூன்றாவது இலங்கையுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு தொலைபேசி வலையமைப்பு தொடர்பான தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்ளல் மற்றும் சோபா ஒப்பந்தத்தை விரைவாக கைச்சாத்திடல் என்பனவே அவை நான்கும்.

இவற்றில் நான்காது தவிர ஏனைய மூன்றையும் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துவிட்டார் என்றே தோன்றுகின்றது. அமெரிக்காவின் யோசனைகளை நடைமுறைப்படுத்தினால் இலங்கை மற்றொரு பனாமாவாக மாறும் என்றும் அவர் எச்சரித்தார்.

### உள்ளூர்த் தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை நடத்த ஜனாதிபதியைச் சம்மதிக்க வைக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் பிரிவு தேசிய அமைப்பாளர் சமித் விஜேசுந்தர செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை சந்தித்த போது தெரிவித்தார்.

உலகின்எந்தப்பகுதியிலும்ஜனநாயகம் அழியாமல் இருக்க தனது நாடு உறுதிப்படுத்தும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்திருக்கிறார், எனவே இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதில் தனது தூதுவர் ஊடாக அவர் தலையிட வேண்டும் என்றார் விஜேசுந்தர.

### நாடாளுமன்றத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் விரைவில் சாதகமான முடிவுகள் கிடைக்கவுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சியின் ஊடாகவும் நாடுகள் அராஜக நிலைக்கு மாறும் என்றும், எனவே ஒரு நாட்டின் அரசமைப்பைப் போன்று, பொருளாதாரத்தையும் ஒருசேர பாதுகாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

திருகோணமலை விமானப்படைத் தளத்தில்,நேற்று முற்பகல் நடைபெற்ற விமானப்படைக்குத் தெரிவான கெடட் உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்று வெளியேறும் அணிவகுப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலை விமானப்படைத் தளத்தை வந்தடைந்த முப்படைத் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விமானப்படை மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

37 அதிகாரிகளும் மூன்று பெண் அதிகாரிகளும் நேற்று பயிற்சி பெற்று வெளியேறியதுடன், அதிகாரிகளாகும் விமானப்படை வீரர்களுக்கு ஜனாதிபதியால் 'வாள்' வழங்கப்பட்டது.

மேலும், பறக்கும் படைப் பயிற்சி பெற்ற 13 உத்தியோகத்தர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன், விசேட திறமைகளை வெளிப்படுத்திய 7 பேருக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதிகாரிகளாகும் வீரர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் குழு புகைப்படத்திலும் ஜனாதிபதி இணைந்துகொண்டார்.

விமானப்படை இசைக்குழுவினரால் விசேட நிகழ்ச்சி நடத்தப்பட்டதுடன் பரிசூட் கண்காட்சியுடன் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

பாடசாலைக் கல்விக்குப் பிறகு விமானப்படையில் இணைந்து, பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து, இன்று அதிகாரிகளாகும் உங்கள் அனைவருக்கும் முதலில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

கடினமான பயிற்சிக்குப் பிறகு நீங்கள் இன்று அதிகாரிகளாவது, உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் என்று எனக்குத் தெரியும். ஒருவேளை நீங்கள், உங்கள் ஊரில் விமானப்படை அதிகாரியான முதல் நபராக இருக்கலாம்.

இன்று உங்களுக்கு ஒரு பாரிய பொறுப்பு உள்ளது. எனவே, உங்களையும், உங்களின் தொழில் கண்ணியத்தையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்தொழிலுக்கு அவப்பெயர் மற்றும் அதனைக் களங்கப்படுத்தும் வகையில் எதையும் செய்யாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் இலங்கை விமானப்படையின் உறுப்பி னர் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொண்டு பெருமையுடன் செயல்படுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நீங்கள் அதிகாரிகளாகும் போது, அரசமைப்பை நிலைநிறுத்து வதாக சத்தியப்பிரமாணம் செய்தீர்கள். விமானப் படையின் பதவிப் பிரமாண மும் செய்து கொண்டீர்கள். இந்த இரண்டு பிரமாணங்களிலும் குறிப்பிடப் பட்டிருப்பது உங்களின் முதன்மையான கடமை மற்றும் பொறுப்புமாகும்.

அரசமைப்பைப் பாதுகாப்பதும், நாட்டைப் பாதுகாப்பதும் உங்கள் பொறுப்பாகும். ஏனெனில் நாடு இல்லாமல் அரசமைப்பு இல்லை.

ஒரு நாடு இல்லாமல், அரசமைப்பு வெறும் காகிதத் துண்டாகவே இருக்கும். ஒரு நாடு இருப்பதாலேயே அரசமைப்பு நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

நீங்கள் அளித்த சத்தியப் பிரமாணத்தின்படி, இந்நாட்டு அரசமைப்புக்கும், சட்டத்துக்கு உட்பட்டு செயற்படவும், குடியரசுக்கு விசுவாசமாகச் செயற்படவும் உறுதியளித்துள்ளீர்கள்.

நமது நாட்டின் அரசமைப்பின் முதல் சரத்து 'இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அரசமைப்பு இருப்பது குடியரசுக்காகத்தான்.

நாட்டின் ஒற்றையாட்சி பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த அத்தியாயம், மக்கள் இறையாண்மையை செயல்படுத்தும் நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் நமது தேசிய கீதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.

மற்ற அனைத்து அத்தியாயங்களும் இவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவே உள்ளன. அப்படியானால், நாம் அதன்படி செயற்பட வேண்டும்.

முதலில் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு நாம் ஒரு இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாடாக இருக்க வேண்டும்.

இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாட்டை அச்சுறுத்தும் வகையில் எதுவும் நடக்க இடமளிக்கக்கூடாது. அது நமது முக்கிய கடமை. அங்கு நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்.

ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க, இந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு 1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டுவரை அச்சுறுத்தலுக்கு உள்ளானது. அந்தச் சந்தர்ப்பத்தில் முப்படையினரும் பொலிஸாரும் உயிர்த் தியாகம் செய்து அதனைப் பாதுகாத்தனர்.

ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால் நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நாடு என்ற வகையில் நாம் ஒரு தனியாக எழுந்து நிற்க வேண்டுமாயின், இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் போன்று, அனைத்து மதத்தினரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாம் அனைவரும் நமது கலாசாரத்தையும் மதத்தையும் பாதுகாக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாடு பிளவுபட்டால் அது நாட்டின் ஒற்றையாட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

அதேபோன்று, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை என்ற நிறுவனங்களால் இலங்கையின் சட்டபூர்வ தன்மை நிறுவப்பட்டுள்ளது. சட்டத்துறை இயற்றும்

(09 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தஞ்ச கோரிக்கையை ஆஸி. மீளாய்வு செய்யவேண்டும்

## தமிழ் ஏதிலிகள் கழகம் வலியுறுத்து

ஏதிலிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழ் ஏதிலிகளின் விண்ணப்பங்களை ஆஸ்திரேலிய அரசாங்கம் மீள பரிசீலனை செய்யவேண்டும் என தமிழ் ஏதிலிகள் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஆர்ஓஎஸ் விசாவில் இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏதிலிகள் உள்ளடக்கப்படவில்லை என தமிழர் ஏதிலிகள் கழகம் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

புதிய விசா, டிபிவி வைத்திருப்பவர்களிற்கும் செவ் வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் நிரந்தர குடியுரிமையைப் பெறுவதற்கான வழியை கொண்டுள்ளது என தமிழர் ஏதிலிகள் கழகம் தெரிவித்துள்ளது.

ஆனால் சுமார் 12 ஆயிரம் ஏதிலிகளுக்கு இந்த விசா மறுக்கப்பட்டுள்ளது. விசாவிற்கான துரித பரிசீலனை முறையின் கீழ் இது மறுக்கப்பட்டுள்ளது எனவும் தமிழர் ஏதிலிகள் கழகம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய தொழில்கட்சி தொடர்ந்தும் எல்லைகளைப் பாதுகாப்பது அத்துடன் கடந்த ஒருமாதகாலமாகப் படகுகள் மூலம் வரும் ஏதிலிகளுக்கு விசா வழங்க மறுப்பது என்ற தன்னிச்சையான முடிவுகளானவை ஏதிலிகள் மட்டத்தில் தகுதிவாய்ந்தவர்கள் தகுதியற்றவர்கள் என்ற பாகுபாட்டை ஏற்படுத்துகின்றது எனத் தமிழர் ஏதிலிகள் கழகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஏதிலிகளுக்கு மாத்திரம் ஆர்ஓஎஸ் வழங்குவதால் இந்த விசாவிலிருந்து நீக்கப்பட்டவர்கள் தங்களது எதிர்காலம் தொடர்பான பயத்தில் இருக்கும் மற்றும் திருப்பி அனுப்பப்படுவோமோ என்ற ஏக்கத்தில் இருக்கும் ஏனையவர்களுக்கு அதிகரித்த விழிப்புணர்வையும் பயத்தையும் கொடுக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ஏதிலி சிறுவர்களாக உள்ளவர்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவர்கள் தங்கள் நண்பர்கள் போல பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏதிலிகள் எப்படி நாட்டுக்கு வந்தார்கள்? எவ்வளவு காலம் நாட்டில் வசிக்கின்றார்கள்? அவர்கள் வேலை செய்கின்றார்களா? வரிகட்டுகின்றார்களா? என்ற பேதமின்றி அனைவருக்கும் நிரந்தர பாதுகாப்பு விசா வழங்கப்படவேண்டும். பல புதிய தமிழ் ஏதிலிகள் இந்த விசா நடைமுறையின் கீழ் விலக்கப்பட்டுள்ளனர் எனவும் தமிழ் ஏதிலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் இனவன்முறைகள் காரணமாக 1984 ஆம் ஆண்டு முதல் தமது பாதுகாப்பைத் தேடி தமிழர்கள் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள போதிலும் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்காது இந்த அரசாங்கம் அவர்களைத் தொடர்ந்தும் பயமுறுத்தி வைத்திருக்கின்றது எனவும் தமிழர் ஏதிலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களில் பலர் இனப்படுகொலைகளுக்கான சாட்சிகளாக இருந்தபோதிலும் அவர்களின் விண்ணப்பங்கள் ஆஸ்திரேலியாவின் ஏதிலிக்கான மதிப்பீட்டு பரிசோதனையின் போது நிராகரிக்கப்பட்டுள்ளன எனவும் தமிழர் ஏதிலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பாக 2015 ஜூலை முதலாம் திகதிக்கும் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் குடிவரவுதுறையின் பரிசீலனை அதிகார சபையின் கீழ் 94 வீத தமிழ் ஏதிலிகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமை எமக்கு ஆழ்ந்த கரிசனையை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய உலக நாடுகளின் ஏதிலிகளை விட இலங்கைத் தமிழர்களே அதிகளவில் நிராகரிக்கப்பட்டுள்ளனர் எனவும் தமிழ் ஏதிலிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அடிப்படையில் ஏதிலிகள் அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட தமிழ் ஏதிலிகளின் விண்ணப்பங்களை மீள பரிசீலனை செய்யவேண்டும் என ஏதிலிகள் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 37 வகையான மருந்துகளை வழங்க உலக சுகாதார அமைப்பு இணக்கம்

நாட்டில் பற்றாக்குறையாக உள்ள 37 வகையான மருந்துகளை உடனடியாக வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக் கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலியரம்புக்வெல்ல மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதுதொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்து இந்தக் கலந்துரையாடல் ஜெனீவாவில் இடம்பெற்றதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறை மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குத் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.







## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 15 அரசடி வீதி நான்காம் ஒழுங்கையில் ஆதன இலக்கம் 24 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது அம்பலவாணர் சின்னப்பு என்னும் பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அம்பலவி செல்லப்பா கைம்பெண் இராசமணி என்பவர் பிரசித்த நொத்தாரிசு தாமோதரம் குணரத்தினம் முகதாவில் 1961.08.16ஆம் திகதியிட்டு 7206 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதியுறுதி மூலம் அச்சுவேலி வடக்கு மூத்தவி சுந்தரம் மகள் செல்லம்மாவுக்கு அறுதியாக விற்றிருந்தார்.

பின்னர் குறித்த ஆதனத்தை இல 149/6,4 ம் ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம், சோமசுந்தரம் புவனேந்திரராசாவும் பெண் சிறீநந்தினியும் இரத்தினசபாபதி சிறீதரனும் இரத்தினசபாபதி பாஸ்கரனும் இரத்தினசபாபதி நிரகரனும் அவ்வூர் தர்மசீலன் நகுலேசையாவும் ரூபிகா நகுலேசையாவும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 2002.09.18 ம் திகதியிட்டு 2249 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அவ்வூர் இரத்தினசபாபதி கைம்பெண் செல்லம்மா என்பவருக்கு அறுதி வழங்கியுள்ளார்கள்

பின்னர் குறித்த ஆதனத்தை இல 149/6,4 ஆம் ஒழுங்கை, அரசடி றோட்,.கந்தர்மடம், யாழ்ப்பாணம் இரத்தினசபாபதி கைம்பெண் செல்லம்மா என்பவர் பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 12002. 09.18 ஆம் திகதியிட்டு 2250 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் அவ்வூர் தனது மகள் அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினிக்கு சீதனம் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடக்கு இறை அம்மை கோயில் வெளி நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறும் (நில.பர 1 குளி 16) கல் வீடு வளவும் குசினியும், வான்பயிர் செய் பயிர்களும். இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பதினாறுக்கும் எல்லை

கிழக்கு: அப்புக்குட்டி சண்முகத்தின் உரிமைக்காரரின் ஆதனம்
வடக்கு: மூத்தவி அப்புக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்
மேற்கு: அரசடி 4 னிம் ஒழுங்கை
தெற்கு:- இரத்தினசபாபதி சிறீதரனுக்குரிய ஆதனம்

இவ்வெல்லைப்படி இதடங்கலும் இன்னும் இதன் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் தெற்கேயிருக்கும் றோட்டிலிருந்து வரும் ஒழுங்கையுருத்தும்.

தற்போது இவ்வாதனத்தை அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினி தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ/பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த எழுத்து ஆவணங்களுடன் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அரியக்குட்டி பாலசுப்பிரமணியம் பெண் சிறீறாஜினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்**

# நேற்று இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சிப் பதிவுகள் ....


















## இலங்கையின் முன்னணி முதலீட்டு நிறுவனத்துடன் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யுங்கள்

First Capital
A Janashakthi Group Company

| | |
|---|---|
| 29%* | 3 மாதங்கள் |
| 28%* | 6 மாதங்கள் |
| 27%* | 12 மாதங்கள் |

- பாரம்பரிய வைப்புகளுக்கு உயர் வட்டி விகிதம்
- இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.
- எங்களின் அழைப்புமையம் (Call Centre) ஊடாக நேரடியாக அணுகலாம்.
- முதிர்வுகள் மற்றும் மீளப் பெறுதல்களுக்கு விரைவான தீர்வு
- முதலீட்டு ஆலோசனைகள் மற்றும் சந்தைசார் தகவல்கள் First Capital Research பிரிவினால் வழங்கப்படும்.

*வருடத்திற்கு

மார்ச் 03/04/05 ஆம் திகதிகளில்
யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் First Capital நிறுவனத்தினரை சந்திக்க முற்றவெளி மைதானத்திற்கு (Stall No.90) வருகைத் தாருங்கள்
அல்லது 0777 704 565 இற்கு அழையுங்கள்.

Address: No. 02, Deal Place, Colombo 03, Sri Lanka. | Email: info@firstcapital.lk | Website: www.firstcapital.lk

காலைக்கதிர் Kalaikkathir

## நாடாளுமன்றத் ....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களை நடைமுறைப்படுத்த நீதித்துறை செயற்படுகின்றது.

இந்த அனைத்து நிறுவனங்களாலும் இலங்கையின் அரசமைப்பைப் பாதுகாப்பது தொடர்பான விடயங்கள் நடைபெறுகின்றன. எனவே, இந்த நிறுவனங்களைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும்.

ஒரு அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றது அல்லது மாற்றப்படுகின்றது. நாடாளுமன்றத் தேர்தல் இல்லாமல் ஆட்சி மாற்றம் சாத்தியமில்லை. வீதிகள் என்பது நாடாளுமன்றத்துக்கான மாற்று வழியல்ல.

கடந்த ஜூன் மாதம் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாடாளுமன்றம் இல்லாத நாடுகள் அராஜக நாடுகளாக மாறலாம். ஏனெனில் நாடாளுமன்றம் இல்லையென்றால் சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லாமல் போய்விடும்.

அதேபோன்று, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடுகளும் அராஜகமாகின்றன. எனவே, ஒரு நாட்டின் அரசமைப்பையும் பொருளாதாரத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

கடந்த சில நாட்களாக, இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல செய்திகளைக் கொண்டு வருவதற்காக, வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல அமைப்புகளுடன் கலந்துரையாடினோம். நாடும் நீங்களும் விரைவில் அதன் பிரதிபலன்களைப் பெறுவீர்கள். பொருளாதாரத்தை இழந்தால் நாம் நாட்டை இழப்போம்.

நாட்டின் அரசமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட அடிப்படை நிறுவனங்கள் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். இது உங்களின் பொறுப்பு ஆகும். இவை அனைத்தும் பாதுகாக்கப்பட்டால், உங்களுக்கு ஒரு நாடு இருக்கும்.

மேலும், அரசமைப்பு வழங்கிய ஜனநாயகமும் பாதுகாக்கப்பட வேண்டும். அரசமைப்பும், நாடும் ஒன்றாகவே முன்னோக்கிச் செல்கின்றன. அதனைப் பிரிக்க முடியாது. இன்று இந்தப் பொறுப்பை ஏற்றுள்ள உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன் – என்றார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன, இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ல் சுதர்சன பத்திரன, பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஐஸ், கஞ்சாவுடன் இருவர் சிக்கினர்

காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் ரக போதைப் பொருள் மற்றும் கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் 45 மற்றும் 42 வயதுடைய சந்தேக நபர்களே கைதாகியுள்ளனர்.

# கைதடியில் இன்று இலவச டீசல் டோக்கன்

கைதடி கமநலசேவை நிலைய எல் லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பில் 60 பரப்பிற்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான இலவச டீசல் விநியோக டோக்கன்கள் இன்று சனிக்கிழமை வழங்கப்படவிருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர்.

நெல் அறுவடைக்கான டீசலைப் பெறுவதற்கான டோக்கனை பெறுவ தற்கு வரும் விவசாயிகள் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் உரமானியம் பெற்ற பற்றுச்சீட்டு ஆகியன சகிதம் காலை 9 மணிக்கும் நண்பகல் 12மணிக்கும் இடையில் வருகை தந்து கமநலசேவை நிலையத்தில் டோக்கனைப் பெற்று கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் இலவச டீசலை பெற்றுக்கொள்ள முடியும் என அறியத்தந்துள்ளனர்.


A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

காலைக்கதிர்
Kalaikkathir




















## தலைமன்னார் மக்கள் விசனம்



தலைமன்னார் கடற்பரப்பில் இருந்து வெள்ளிக்கிழமை) காலை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கு பக்தர்கள் செல்வதற்கு தயாராக இருந்த போதிலும் உரிய நேரத்துக்கு கடற்படை மக்களை பயணிக்க அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நீண்ட நேரம் தலைமன்னார் கடல்கரை பகுதியில் மக்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முதல் காத்திருந்தனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக குழந்தைகள், வயோதிபர்கள் என பலர் காத்திருந்தனர் எனவும் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்களை காலையில் சமர்ப்பித்த போதும் அந்த ஆவணங்கள் பரிசீளிக்கப்பட்ட போதும் கடலின் படகும் மூலம் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நேரத்துடன் மக்களின் பதிவுகளைமேற்கொண்டு கச்சை தீவு செல்ல அனுமதிவழங்கப்பட்டுவந்தது.

ஆனால் நேற்றைய தினம் உரிய நேரத்துக்கு செல்வதற்கு அனுமதிக்காமையால் நீண்ட நேரம் கடும் வெயிலில் காத்திருக்கவேண்டியசூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு அசௌகரிங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர் எனத் தெரியவருகின்றது.

## சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் வீட்டிலும் திருடர்கள் கைவரிசை!

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க வின் அதிகாரபூர்வ இல்லத்தில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகசீன் சிறைச்சாலை வளாகத்தில் இந்த அதிகாரபூர்வ இல்லம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறைச்சாலை திணைக்கள ஊடகப் பேச்சாளர் சந்தன வின் மனைவியினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வ இல்லத்தை சுத்தம் செய்வதற்கு சிறைக் கைதிகள் ஈடுபடுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலி முகத்திடலில் கடல் ஆமைகள் முட்டையிடும் போக்கு அதிகரிப்பு!

### வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தகவல்

இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதிகளில், குறிப்பாக காலி முகத்திடல் பசுமைக் கரையோரப் பகுதிகளில் அதிகளவான கடல் ஆமைகள் முட்டையிடுகின்றன என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி. சூரியபண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகள் முட்டையிடுவதற்காக கடலோரப் பகுதிக்கு வருவது வழக்கம். இருப்பினும், காலி முகத்திடல் பசுமைக் கரையோரப் பகுதியில் தற்போது முட்டையிடும் போக்கு அதிகரித்து காணப்படுகிறது.

இதன் காரணமாக மேற்கு கடற்கரை பகுதிகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடல் ஆமை முட்டைகள் புதைக்கப்பட்டிருக்கலாம்.



இதேவேளை, இலங்கையில் உள்ள மிகப் பெரிய பிரச்சினைகளில் ஒன்று வேட்டைக்காரர்களாவர், அவர்கள் முட்டைகளை தவறாகக் கையாளுகிறார்கள்,

இந்நிலையில், வளமாகக் கருதப்படும் முட்டைகளைப் பாதுகாக்கும் திட்டத்தை வனவிலங்கு திணைக்களம் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




## தும்புத் தொழிற்சாலை தீப்பிடித்து எரிந்து நாசம்

மாதம்பை பகுதியில் உள்ள தும்புத் தொழிற்சாலையொன்று திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்த நாசமாகியுள்ளது.

குறித்த தீ விபத்து வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் மாநகரசபையுடன் இணைந்து பொதுமக்கள் மற்றும் பொலிஸார் நேற்று காலைவரை தீ யைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்றுமதிக்கு தயார் நிலையில் பொதிசெய்யப்பட்டிருந்த பெருந்தொகையான தும்புகள் மற்றும் தொழிற்சாலை இயந்திரங்கள் ஆகியன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த தீவிபத்தில் எவ்வி உயிர்ச் சேதங்களோ அல்லது எவருக்கும் காயங்களோ ஏற்படாத நிலையில், தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்நிலையில் கடந்த வாரமளவில் மற்றுமொரு தும்புத் தொழிசாலையொன்று மாதம்பை பகுதியில் தீயில் எரிந்து நாசமாகியமை குறிப்பிடத்தக்கது.









NIPPON PAINT
THE COATINGS EXPERT

ATOM 2-in-1

Asia Pacific No.1

3 வருட உத்தரவாதத்துடன்

# சிறந்த சேமிப்புடன்

## வெளியே உள்ளே

## 2-in-1

# சிறந்த பெயின்ட்




**NIPPON PAINT ATOM 2-IN-1**

இது உட்புற மற்றும் வெளிப்புற மேற்பரப்புகளுக்கு ஏற்றதாக அமைகிறது. விரிவான R&D Ig பின்பற்றி, எங்கள் அலங்காரப் பங்காளர்களின் உள்ளீடுகளைக் கேட்டு, மாற்றியமைக்கப்பட்ட Acrylic emulsion அடிப்படையிலான அதிகபட்ச செயல்திறனுக்காக இந்த டைனமிக் பெயின்ட் உருவாக்கப்பட்டுள்ளது.

- தீங்கு விளைவிக்கும் மாசு வாயுக்களை வெளியிடுவதில்லை
- உட்புற மற்றும் வெளிப்புற சுவர்கள் இரண்டிற்கும் பயன்படுத்தலாம்
- குறைந்த ஆவியாகும் கரிம கலவைகள் அடங்கியது.
- கழுவக்கூடியது/துடைக்கக்கூடியது
- மேற்பரப்பை சுத்தம் செய்வதை எளிதாக்குகிறது
- அதிகபட்ச செயல்திறன்
- சுற்று சூழலுக்கு நேயமானது
- சுவர்களை சுத்தம் செய்தல் இலகுவானது




Face Upwards
ush On
pray
Roller
2 hours
urs Re-coat
Water
i onmental

www. nipponpaint.lk

ISO 14001 : 2015
ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM CERTIFIED PLANT

Green Label SINGAPORE
Environmentally Friendly Paint

NIPPON PAINT

**NIPPON PAINT LANKA (PVT) LTD**
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2023இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் சிவராத்திரி நடனம் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறீர்கள்? தமிழ்நாட்டில் கடவுள் இல்லை என்கிறவன் செய்கிற அநியாயத்தைவிட கடவுளின் பெயரால் செய்யப்படுகிற அநியாயங்களின் அளவு கூடிக் கொண்டே போகிறது. அதற்கு, அந்த அநியாயங்களைச் செய்கிற சாமிமாரை மட்டும் நான் குறை சொல்ல மாட்டேன். ஓர் ஆழமான சமயத்தில் பிறந்து அதன் வழி நடந்த பக்தர்கள் அந்த சாமிமார்களின் தன்னிச்சையான செயல்களுக்கு, தருகிற ஆதரவை நினைக்கத்தான் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

சத்குரு என்ற வார்த்தைக்கு உலகத்தின் இருள் நீக்குகிற ஆசான் என்பது அர்த்தம். ஆனால் அந்த வார்த்தையை தமக்கு அடைமொழியாகப் போட்டுக் கொண்டு உலகத்தை மாயை இருளில் மூழ்குவிக்கின்ற சாமிமார்களின் தொகை இந்து மதத்தில் இந்த நூற்றாண்டில் அதிகரித்துக்கொண்டே போகிறது. எல்லாம் கலி முற்றுகிறது என்பதற்கான அடையாளங்கள்தான்.

அண்மையில் ‘மூக்குத்தி அம்மன்’ என்கின்ற ஒரு சினிமா வெளிவந்தது. அந்த சினிமாவில், இந்த சத்குருவையும் அவரது பொய்மைகளையும் இயக்குநர்களான ஆர்.ஜே.பாலாஜி, என்.ஜே.சரவணன் ஆகியோர் மிகத் துணிவாக அடையாளப்படுத்தியிருந்தனர். இந்தப் படத்தைப் பார்த்த பிறகும் இவர் பின்னால் போக இன்னும் கூட்டம் இருப்பது ஆச்சரியம்தான். ஆலயங்களில் பலி கொடுக்கப்படப் போகிற ஆடுகள், தாமாகச் சென்று பலிபீடத்தில் கழுத்தை வைப்பதைப் போல பொய்மைச் சாமியார்களிடம் வலியப் போய் ஏமாற ஒரு கூட்டம் இருப்பது வியப்பைத் தருக்கிறது.

தன் மகளுக்கு ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைத்துவிட்டு, தன்னிடம் வரும் சிஷ்யைகளுக்கு மொட்டை அடித்துக் கட்டாயத் துறவு பூண வைக்கும் இந்த சத்குருவின் கூத்து ஏற்கனவே பகிரங்கப்படுத்தப்பட்டதுதான்.

என்ன அநியாயத்தையாவது செய்து, ஒருவர் தன்னை அடையாளப்படுத்தி விட்டால் கேட்டுக் கேள்வியில்லாமல் அவர் பின்னால் சென்று ஏமாந்து போக இந்தியாவில் ஒரு கூட்டம் எப்போதும் தயாராய்க் காத்திருக்கிறது. இவர்களுக்கெல்லாம் ஆறாவது அறிவு இருக்கின்றதா என ஐயப்படவேண்டியிருக்கிறது.

சத்குரு என்று சொல்லப்படும் இவர் பற்றிப் பாதகமான குற்றச்சாட்டுக்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. அரச நிலத்தைக் கைப்பற்றினார், தனது இருப்பிடத்தை அமைப்பதற்காக காட்டு யானைகளின் வழித்தடத்தை மறித்து கட்டுமானம் எழுப்பினார் என்பவை தொடங்கி கொலை, பாலியல் குற்றங்கள் வரை பட்டியல்கள் நீண்டு கொண்டே போகின்றன. உண்மை பொய் தெரியாவிட்டாலும் ஒரு குரு இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாவதே அசிங்கம் என்பதைக்கூட அங்குள்ள மக்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது கொடுமையிலும் கொடுமை.

மக்களை விட்டுத் தள்ளுங்கள்! இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சொல்லப்படுகிற ஓர் இடத்திற்கு நாட்டின் தலைவர்கள் செல்லலாமா? இம்முறை சிவராத்திரிக்கு நாட்டின் ஜனாதிபதியே சென்றிருப்பதை என்னென்று சொல்வது?

பக்தியோடு அனுஷ்டிக்கப்படவேண்டிய சிவராத்திரி விரதத்தை ஒரு களியாட்டக் கண்றாவி ஆக்கியிருக்கிறார் அந்த மனிதர். நடிகையரோடு அவர் அடிக்கும் கூத்தைக் காண அருவருப்பாய் இருக்கிறது. சென்றிருந்த பக்தர்களும் கூடிக் கொண்டாடிக் குதூகலிக்க வைக்கப்படுகிறார்கள். புண்ணியம் தேட வேண்டிய இரவில் தானும் பாவம் தேடி மற்றவர்களையும் பாவம் தேட வைக்கிறார் அந்த மனிதர். வழிபாட்டை எளிமைப்படுத்துவது வேறு. மலினப்படுத்துவது வேறு. இவர் மலினப்படுத்தும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார். இப்படித்தான் எங்கள் பட்டிமண்டபங்களை எளிமைப்படுத்துவதாய்க் கூறித் தொடங்கி, பின் அதை மலினப்படுத்தி, அறிவின் சிகரத்தில் நின்ற அந்த நிகழ்ச்சியை இன்று அசிங்கத்தின் பாதாளம் வரை தள்ளியிருக்கிறார்கள். அதையேதான் சத்குருவும் ஆன்மீகத்தில் செய்து கொண்டிருக்கிறார்.

சிவன் என்று சொன்னால் சமய அடையாளமாய் அது கருதப்பட்டு அதனால் அரசினால் வரக்கூடிய வருமானங்கள் குறைந்துவிடும் என்பதற்காக சிவன் சிலையை அமைத்து அதற்கு ‘ஆதியோகி’ எனப் பெயரிட்டு அவர் செய்யும் கண்றாவிக் கூத்துகளுக்கு மத்திய மாநில அரசுகள், ஊடகங்கள், அறிஞர்கள், செல்வர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஆதரவளிப்பதைக் காண சகிக்கவில்லை.

நம் இந்துமதம் தான் எல்லாக் கூத்துகளுக்கும் இடம் கொடுக்கிறது. அது அம்மதத்தின் பலவீனமன்று! பலம் என்றே கருதுகிறேன். கெட்டவை ஒட்டாத் தன்மை கொண்டது நம் இந்துமதம். ஒட்டும் என்று கருதினால்த்தான் கெட்டவை பற்றி நாம் அச்சமுற வேண்டும். இக் கெட்டவைகள் தானாகக் கூட்டம் கூட்டிப் பின் அழிப்பாரின்றி அழிந்துவிடும் என்பது சர்வநிச்சயம்! நான்தான் கடவுள். என் பெயரே மந்திரம் என்று சொன்ன ‘இரணியன்’ போன்றோரின் வரலாறு மேற்சொன்ன உண்மைக்காம் சான்று. வெகு சீக்கிரத்தில் காலம் இவ் உண்மையை நிரூபிக்கும் என நினைந்து நாம் அச்சம் தவிர்ப்போம்!

**சல்லடையாரின் சலிப்பு * என்னத்தைச் சொல்ல? இம் மனிதர் சைவ சமயத்தைச் சந்தி சிரிக்கிற வைக்கிறார் என்பது உண்மைதான்.**

**2. உரலார் கேள்வி:-** என்ன உலக்கையாரே சுவாமி(?) நித்தியானந்தாவின் ‘கைலாஸ்’ உறுப்பினர்கள் ஐ.நா.வுக்கு உறுப்புரிமை வேண்டிச் சென்றார்களாமே?

**உலக்கையார் பதில்:-** என்ன இம்முறை சாமிமார் பற்றிய கேள்விகளாகவே தொடர்ந்து வருகின்றன. அந்த மனிதனின் செயலை துணிவின் எல்லை என்று சொல்வதா? அறிவீனத்தின் எல்லை என்று சொல்வதா? என்று புரியவில்லை. ஒரு நாடு கைது செய்யக் காத்திருக்கும் ஒருவர், மற்றவர்களை ஏமாற்றித் தேடிய பணத்தில், எங்கோ ஒரு தீவை விலைக்கு வாங்கி, அதைத் தனிநாடாக அறிவித்ததோடல்லாமல் இப்பொழுது ஐ.நா. உறுப்புரிமையும் கேட்டு நிற்கிறார். இவ்வளவு செல்வத்தோடும் குற்றப் பதிவுகளோடும் நாட்டைவிட்டு ஒருவர் எப்படி வெளியேறினார்? என்ற கேள்விக்கு இந்திய அரசும் அதன் புலனாய்வுத்துறைகளும் என்ன பதில் சொல்லப் போகின்றனவோ தெரியவில்லை. இவர்கள் எல்லாம் நம் இந்துமதத்தின் மானம் போகும்படியாக அதனைப் பிரசித்தப்படுத்த முனைந்து கொண்டிருக்கிறார்கள். இத்தனை நடந்த பின்பும் இவர்கள் பின்னால் போக ஒரு பெரும் கூட்டம் இருப்பதுதான் ஆச்சரியம். இந்த கலி காலத்தில் நம் பக்தர்கள் பலர் பேரின்பத்திலும் சிற்றின்பத்தையே தேடி நிற்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது. ‘வாழ்ந்து போதீரே’ என காலத்தின் கையில் இவர்களை விட்டுவிட வேண்டியதுதான்.

**சல்லடையாரின் சலிப்பு * நம்ம தலைவர்களும் இப்படி ஒரு தீவை விலைக்கு வாங்கி அதைத் தனித் தமிழ்நாடாய் அறிவித்தால் என்னங்கோ?**

**3. உரலார் கேள்வி:-** வீதிகள் தோறும் மற்றைய சமயச் சிலைகள் முளைத்தெழுவது போல, இப்போது நம் யாழ்ப்பாணத்தில் எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்களும் சிவன் சிலைகளும் முளைத்துக் கொண்டிருப்பதைக் கவனித்தீர்களா? இதை வைத்து நமது சைவம் வலிமை பெற்று வருகிறது என்று சொல்ல முடியுமா?

**உலக்கையார் பதில்:-** நமது சமயச் செயற்பாடுகள் அனைத்தும் நம் சிந்தனையிலிருந்து சொந்தமாக உருவாக வேண்டும். மாற்றுச் சமயங்களைப் பார்த்து அவற்றின் செயற்பாடுகள் போல் நாம் செயற்படத் தேவையில்லை என்பது எனது கருத்து. அந்த அளவிற்கு நமது சமயம் பலவீனப்பட்ட ஒரு சமயம் அல்ல. நமது சைவத்திற்குத் தேவையானது action ஏ தவிர reaction அல்ல. ஆரம்பத்தில் மற்றைய சமயங்கள் எங்கள் சமயத்தைப் பார்த்துத்தான் தங்கள் செயற்பாடுகளை அமைக்க முற்பட்டன. கொடியேற்றுவது, திருவிழா செய்வது, கூடு சுற்றுவது, ரதம் இழுப்பது என பலவகையான கிரியைச் செயற்பாடுகளை, மக்களை ஈர்ப்பதற்காக எங்களிடம் இருந்து அவர்கள் கடன் வாங்கினார்கள். அது தெரியாமல் இன்று நம்மவர்கள் சிலர் அவர்களோடு போட்டி போடுவதாய் நினைந்து, மெல்ல மெல்ல அவர்களின் பாதையில் தாம் செல்லப் பார்க்கிறார்கள்.

சைவம் ஏற்கெனவே வலிமை பெற்றுத்தான் இருக்கிறது. இனி அதனை யாரும் வலிமை பெறச் செய்ய வேண்டிய தேவையில்லை. பக்திக்காகவும் வழிபாட்டிற்காகவும் எத்தனை லிங்கங்களை வேண்டுமானால் நிறுவலாம். வெறுமனே மற்றச் சமயங்களின் போட்டிக்காக சிவனின் அருவ, அருவுருவ வடிவங்களை வீதி தோறும் நிறுவ முனைவதில் எனக்கு உடன்பாடில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * வந்திக்க வேண்டிய சிவனை சந்திக்கு இழுப்பது சரியில்ல பாருங்கோ.**

**4. உரலார் கேள்வி:-** எதிர்க்கட்சியினரால் இலங்கை அரசை எதிர்த்து நடத்தப்படும் போராட்டங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** எனக்கு அப்போராட்டங்களில் உடன்பாடில்லை. எவர் செயலாலோ நாடு அழிவின் எல்லை நோக்கி வீழ்ந்துவிட்டது. அதை நிமிர்த்தி எடுக்க வேண்டியது அனைத்து அரசியலாளர்களின் முதல் கடமையாகும். அதை விடுத்து அரசியலாளர்கள் இந்த அவலத்திலும் தம் அரசியலையே நடத்த முயன்று கொண்டிருக்கிறார்கள். விலையேற்றங்களைச் சொல்லி மக்களை கொந்தளிக்கச் செய்வதால் எந்தப் பயனும் இல்லை. அரசைக் குற்றம் சொல்கிறவர்கள் விலையேற்றங்கள் செய்யாமல் நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த ஏதேனும் வழி இருந்தால் அதை முதலில் சொல்லவேண்டும். யதார்த்தம் உணர்ந்தவர்களுக்கு ஒன்று தெரியும். இன்றைய நிலையில் எவர் அரசாட்சிக்கு வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்தி எடுக்க, விலையேற்றங்களையும் வரியேற்றங்களையும் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

**சல்லடையாரின் சலிப்பு * ‘யதார்த்தவாதி வெகுசன விரோதி’. வாரிதியார் வாங்கிக் கட்டப் போகிறார் பாருங்கோ**

**5. உரலார் கேள்வி:-** தங்களது கட்சியின் பெயரைச் சொல்லி, வெளிநாடுகளில் சிலர் பணம் சேகரிக்க முயல்வதாய் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் குற்றம் சாட்டி இருப்பதைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** பார்த்தேன்! பார்த்தேன்! அவர் இப்போது ‘திரிசங்கு சொர்க்க’ நிலையில் இருக்கிறார். அவர் தொடங்கிய கட்சியில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? என்பது எவருக்கும் தெரியவில்லை. இவரோடு சேர்ந்தால் பிற்காலத்தில் தம் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என நினைந்துச் சேர்ந்தவர்கள், இப்போது விட்டால் காணும் எனும் நிலையில் தலைதெறிக்க ஓடத் தயாராய் இருக்கின்றனர். இந்நிலையில் தான் இருக்கிறேன் என்பதையும் தன் கட்சி இன்னும் உயிரோடு இருக்கிறது என்பதையும் உலகிற்குத் தெரிவிக்கத்தான் இப்படிப்பட்ட அறிக்கைகளை அவர் அடிக்கடி வெளியிட்டு வருகிறார். யார் கண்டது இன்னும் இந்தக் கட்சிக்குப் பணம் கொடுக்க யாரேனும் ‘ஏமாந்த சோனகிரிகள்’ இருக்கிறார்களோ என்னவோ?

**சல்லடையாரின் சலிப்பு * கட்சிக்குப் பணம் சேர்க்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில கட்சிக்கு ஆள் சேர்க்கச் சொல்லவேணுமுங்கோ.**

காலைக்கதிர்
Kalaikkathir

# மழை விட்டாலும்...

## அக்கரை / றை அலசல்



என்.சத்தியமூர்த்தி

ஜெனிவாவில் ஐநா மனித உரிமை சபையில் இலங்கை குறித்த விவாதம் இந்த மாதம் முன்னெடுக்கப்படுகிறது. அதனையொட்டி இல்லை என்றாலும், விடுதலை புலிகள் இயக்கம் குறித்த அமெரிக்க அரசின் மதிப்பீடு முக்கியம் பெறுகிறது.

உலக அளவில் தீவிரவாதம் குறித்த அமெரிக்க மதிப்பீட்டில், விடுதலை புலிகள் குறித்த பகுதியின் சாராம்சம் இது தான். இனப்போர் முடிந்து இத்தனை ஆண்டுகளில், இலங்கையில் விடுதலை புலிகள் எந்தவித தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை. என்றாலும், சர்வதேச அளவில் அவர்களுடைய செயல்பாடுகள் தொடருகின்றன.

அந்த விதத்தில், விடுதலை புலிகள் இயக்கத்தின் அனுதாபிகள் மற்றும் அதன் நிதி நிலை ஆதரவுகளும் இன்னமும் தொடருகின்றன, என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. இதன் பொருள், மழை நின்ற பின்னும் தூவானம் நிற்கவில்லை. அதாவது, விடுதலை புலிகள் குறித்த தீவிரவாதம் முடிந்து விட்டது என்று கருதும் போதே, அதனை உயிர்ப்பிப்பதற்கான முயற்சிகள் தொடருகின்றன.

அதே சமயம், அண்மையில், பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற பரபரப்பு செய்தியை மறுதலிக்கும் விதமாக, அமெரிக்க அறிக்கை, 2009ஆம் ஆண்டு இறுதி போரில் அவரும் அவரை சார்ந்த பிறரும் கொல்லப்பட்டார்கள், என்ற எடுத்து கூறுகிறது. இது, அவர் உயிருடன் இருக்கிறார் என்ற செய்தியை நேரடியாக மறுக்கவில்லை என்றாலும், அவர் உயிருடன் இல்லை என்ற உண்மையை உறுதி செய்வதாகவே இருக்கிறது.

பிரபாகரன் குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய ப்ளொட் தலைவர் சித்தார்தன், அவரது பெயரை வைத்து பணம் திரட்டுகிறார்கள், பிழைப்பு நடத்துகிறார்கள், என்று பொருள்படும்படி கூறினார். அந்த விதத்தில், அமெரிக்கா கூறும் அனுதாபிகள் மற்றும் நிதி ஆதாரங்கள் குறித்த விடயங்களும் அந்தந்த நாட்டு அரசுகளால் தீவிரமாக விசாரிக்கப்பட வேண்டியவை.

என்றாலும், அமெரிக்காவின் அறிக்கையில் சில குழப்படிகள் உள்ளதாகவே கருத இடமிருக்கிறது. கடந்த 2014 – 15 ஆண்டு காலகட்டத்தில் மலேசியாவில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள், இந்தியாவில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாட்டு தூதரகங்களை தாக்க திட்டமிட்டிருந்தார்கள். அதனை தொடர்ந்து இந்தியாவிலும் சில கைதுகள் நடந்தன.

இவர்கள் அனைவருமே, விடுதலை புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அமெரிக்காவின் அறிக்கை கூறுகிறது. ஆனால், அந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில், அவர்களில் சிலர் மாலத்தீவை சார்ந்தவர்கள் என்று இந்திய செய்திகள் கூறின. என்னவென்றாலும், அவர்களில் யாரும் விடுதலை புலிகள் இயக்கத்தை சார்ந்தவர்கள் என்று கூறப்படவில்லை.

### கண்டும் காணாமல்...

அண்மை காலங்களில், இந்திய பாதுகாப்பு அமைப்புகள், நடு கடலில் போதை பொருள்களை கைப்பற்றிய சூழலில், அதனோடு, துப்பாக்கி போன்ற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அதனை தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்ததில், அவர்கள் விடுதலை புலிகள் இயக்கத்திற்கு உயிர்கொடுக்க முயற்சி செய்கிறார்கள் என்ற உண்மையை இந்திய அரசு அமைப்புகள் கண்டு பிடித்தன.

ஒரு விதத்தில், இந்த இரண்டு நிகழ்வுகளையும், அமெரிக்க அறிக்கையில் குழப்பி இருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. என்றாலும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உயிர் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்டும் முயற்சிகள் உண்மையே. அல்லது, சித்தார்தன் கூறியது போல், பெரிய பண மோசடி மற்றும் போதை பொருள் கடத்தல் ஆகியவற்றிற்கு விடுதலை புலிகளின் பெயர் தவறாக பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறானால், விடுதலை புலிகள் இயக்கத்தின் மீது மரியாதை கொண்டவர்கள், பிரபாகரன் மீது பக்தி கொண்டவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், இவ்வாறான தவறுகளை கண்டும் காணாமல் போல் இருப்பது, ஏன்? அவர்கள் நினைத்தால், இந்த தவறுகளை திருத்திவிட முடியாதா?

### அறகலயா வன்முறை

இந்த பின்னணியில், வடக்கு வாழ் தமிழர்கள், போர் குற்றங்கள் குறித்து விசாரிக்க உள்ளக பொறிமுறைகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்று நாட்டின் மனித உரிமை ஆணைகுழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அந்த குழுவினர், யார் – யாரை சந்தித்தார்கள் என்பது குறித்தும், அவர்களது அறிக்கையின் நம்பகத்தன்மை ஆகியவை குறித்தும் கேள்விகள் எழுவது இயற்கையே.

ஆனால், அந்த சந்தேகங்களுக்கு அப்பால் சென்று, அவ்வாறு மக்களின் கருத்து இருக்குமேயானால், அது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இடைப்பட்ட காலத்தில், உள்ளக பொறிமுறைகள் குறித்து தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியோரின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அரசிற்கு கிடைத்துள்ளது. அதனை, அரச தலைமை எவ்வாறு கையாளுகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

கடந்த ஆண்டு நடந்த அறகலயா போராட்டத்தின் இடையில், தென்னிலங்கையில் பலவேறு பகுதிகளில் எண்பதுக்கும் மேலான ராஜபக்ஷா ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற அரசியல் அடிவருடிகளின் வீடுகளும், வர்த்தக நிறுவனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. ஏன், ராஜபக்ஷா சகோதரர்களின் உடமைகளும் எரியூட்டப்பட்டன. ஒரே நாள், மாலை ஒன்றரை மணித்தியாலத்திற்குள் அரங்கேறிய இந்த அவலத்தை, விடுதலைப் புலிகள் இயக்கம் கூட இந்த அளவிற்கு கணக்கிட்டு, ஒரு சேர அரங்கேற்றியிருக்க முடியுமா, என்ற கேள்வி எழாமல் இல்லை.

இந்த தீ வைப்பு சம்பவங்கள், அது போன்றே, ஜனாதிபதியின் அலரி மாளிகை, ஜனாதிபதியின் செயலகம் மற்றும் இடைக்கால பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணிலின் சொந்த வீடு ஆகியவையும் போராட்டக்காரர்களின் கைகளில் விழுந்தது, அல்லது எரியூட்டப்பட்டது. அவற்றின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதற்கு அப்பால், அதற்கான சூழ்நிலையை அன்றைய இராணுவம் மற்றும் பொலிஸ் தலைமைகள் ஏற்படுத்தின என்ற குற்றச்சாட்டும் எழுந்தன.

இவ்வாறு, கொழும்பு நீதிமன்றத்தை அடைந்த வழக்கில், பாதுகாப்பு மற்றும் பொலிஸ் செய்த தவறுகள் குறித்து விசாரித்து, முன்னாள் கடற்படை தளபதி, வசந்த கரண்ணாகொட தலைமையிலான மூவர் குழு விசாரித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அதன் படி, அன்றைய இராணுவ தளபதி ஜெனரல் வேந்திர சில்வா, பொலீஸ் மா அதிபர் சந்தண விக்கிரமரத்னே முதலியோர், அன்றைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷா மற்றும் பாதுகாப்பு துறை செயலர், ஜெனரல் கமால் குணரத்னே ஆகியோர் அளித்த உத்தரவுகளை மதித்து செயல்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டால், ஈஸ்டர் தாக்குதல் வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், தனது முடிவை அறிவிப்பது தவிர்க்க முடியாததாகி விடும். ஈஸ்டர் வழக்கில், அன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றுமுள்ளோர், பாதிக்கப்பட்டோருக்கு, பெரும் தொகை, நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிட தக்கது.

### இராணுவ கிளர்ச்சி?

இது மட்டுமல்ல. எப்போது, இராணுவத்தினர், தங்களுக்கு மேலுள்ள அதிகாரிகளின் உத்தரவை ஏற்று நடக்கவில்லையோ, அப்போதே அவர்கள் அரச தலைமைக்கு எதிராக கிளர்ச்சி செய்கிறார்கள் என்றே கருதப்படும். அதிலும் குறிப்பாக இராணுவ தளபதியே இவ்வாறு செய்வாரேயானால், அவரும் அவரை சார்ந்தோரும் இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள். அது போன்றே, சந்தண விக்கிரமரத்னே போன்றோர், நீதிமன்றங்களில், குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

அந்த விதத்தில், அரசின் முடிவை, சர்வதேசம் மட்டுமல்ல, உள்நாட்டு, வெளிநாட்டு தமிழர்களும் வெகுவாக எதிர்பார்ப்பாஜுகள். காரணம், ஜெனரல் சில்வா, அறகலயா காலத்தின் இராணுவ தளபதி மட்டும் அல்ல. அதற்கு முன்னர், கடைசி போரில், தென்னிலங்கையால் போற்றப்பட்டு, தமிழர் தரப்பால் பழிக்கப்பட்ட 58 ஆவது படையணிக்கு தளபதியாகவும் இருந்தார். அவரது தலைமையிலான படையினரின் மனித உரிமை மீறல்கள் என்று காரணம் காட்டி, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள், வேந்திர சில்வா, தங்கள் நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு தடை விதித்திருக்கின்றன.

இதற்கு அப்பாலும், ஐநா மனித உரிமை அமைப்பின் கீழ், போர் குற்றங்கள் குறித்து சர்வதேச பொறிமுறை முன்னெடுக்கப்படுமேயானால், அதன் முன், சில்வா முக்கிய குற்றவாளிகளில் ஒருவராக நிறுத்தப்படுவார், என்று கருதப்படுகிறது. அவ்வாறு, தென்னிலங்கையால் போற்றப்பட்ட ஒருவர், வடக்கு வாழ் தமிழர்களால் பழிக்கப்பட்ட ஒருவர் மீது, வேறு ஒரு வழக்கிலாவது, அரசு தற்போதைய பொறிமுறைகளின் மூலம் தண்டனை பெற்று கொடுக்குமேயானால், அதனால், அரச தலைமை மீது நம்பிக்கை தோன்ற வாய்ப்பு உள்ளது.

அதன் அடிப்படையில், உள்ளக பொறிமுறை மூலம் பொறுப்பு கூறல் விடயங்களுக்கு நல்ல தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையும் தமிழ் மக்களிடையே தோன்றலாம். இதனை தானே, மஹிந்த ராஜபக்ஷா துவங்கிய அரச தலைமைகள் கோரி வந்துள்ளன. கூறி வந்துள்ளன.

### தீவிரவாத தடை சட்டம்

இது தவிரவும், அனைத்து தரப்புகளினாலும் தற்போது வெறுக்கப்படும் தீவிரவாத தடை சட்டத்திற்கு, மாற்று சட்ட வரைவு ஒன்றை, அமைச்சரவை ஏற்றுக் கொண்டள்ளது. அதுவே, நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கபட்டு, சட்டமாகலாம். இடையில், இது குறித்து, உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தல் கோரப்பட்டு, அதில் சில பல மாற்றங்கள் உள்வாங்கப்படலாம்.

தமிழர் தரப்பை பொறுத்தவரை, தீவிரவாத தடை சட்டம் என்றாலே, தங்களை தான் குறிவைக்கிறது என்று இன்றளவும் நம்ப விழைகிறார்கள். ஈஸ்டர் தாக்கதலில் அவர்கள் பங்களிப்பு இல்லை. அதை போன்றே, அறகலயா போராட்ட வன்முறையிலும் அவர்கள் இருக்கவில்லை. என்றாலும், தீவிரவாதிகள் என்றால், நாட்டில் தங்களுக்கு மட்டுமே அவ்வாறு அடையாளபடுத்திக் கொள்ள உரிமை இருக்கிறது என்பது போன்று காட்டிக்கொண்டு அதனை எதிர்க்கிறார்கள்.

என்ன, அறகலயா போராட்டத்தில் பங்களிப்பு என்ற வகையில், பின்னர் பதவியேற்ற, தற்போதைய ரணில் அரசு, ஜேவிபி மாணவர் அமைப்பு தலைவர், வசந்த முதலிகே மற்றும் சில இளம் புத்த பிக்குகளை, தீவிரவாத தடை சட்டத்தின் கீழ், அரசு கைது செய்தது. அவர்கள் இப்போது பிணையில் வெளியில் இருந்து, புதிய போராட்டங்களில் கலந்து கொண்டு, அதற்காகவும் கைது செய்யப்படுகின்றனர்.

ஆனால், வசந்த் முதலிகே முதலானோர் கைதை தொடர்ந்தே, தென்னிலங்கையில், தீவிரவாத தடை சட்டத்திற்கு எதிர்ப்பு துவங்கி உள்ளது. அந்த விதத்தில், பாராளமன்றம், புதிய சட்டம் குறித்து விவாதிக்கும் போது, தமிழ் உறுப்பினர்களுடன் சேர்ந்து, தென்னிலங்கை எம்பிக்களும் சட்டத்திற்கு எதிராகவும் அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் அதி தீவிரமாக பேசுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

என்னே, அறகலயாவின் தாக்கம்!

# வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்!



வவுனியா, மார்ச். 04
வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலை சிற்றுளியர்கள் பல்வேறு கோரிக் கைளை முன்வைத்து நேற்று வெள்ளிக் கிழமை மதியம் 12.30 மணியளவில் வைத் தியசாலை நுழைவாயில் முன்பாகக் கவன வீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முறை யற்ற வரி அதிகரிப்பை நிறுத்து, முறையற்ற நியமனத்தை வழங்குவதை நிறுத்து, வாழ் வாதாரத்தை அதிகரி, வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தை குறை , ஊழியர் பற்றாக் குறையை உடன் நிவர்த்தி செய் போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாதை களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர்.

வைத்தியசாலை சிற்றூழியர்கள் மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை கடமையிலிருந்து விலகி மேற்படி போராட் டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

# குழந்தைகளின் காதுகளுக்கு 'இயர்போன்'ஆல் பாதிப்பு

குழந்தைகள் இணையத்தில் கல்வி கற் கும் போது 'இயர்போன்' பயன்படுத்துவதால் அவர்களின் காதுகளுக்கு பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண் மற்றும் காது தொடர்பில் விசேட நிபுணர் வைத்தியர் சந்திரா ஜயசூரிய இவ் வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குழந்தைகள் அடிக்கடி இயர்போன் பயன்படுத்துவதால், காதுக்குள் காது மெழுகு தள்ளப்படுவதாகவும், இதனால் காது அழு கல், பூஞ்சை, காது டிரம் ஆகிய பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்று காதில் பாதிப்பு ஏற்படு வதால், காது கேளாமை ஏற்படும் எனவும், எனவே கவனமாக இருக்க வேண்டும் என வும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காதில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது செவித்திறன் குறைபாடு ஏற்பட் டாலோ தாமதிக்காமல் மருத்துவரை அணு குமாறு கண் மற்றும் காது தொடர்பில் விசேட நிபுணர் வைத்தியர் சந்திரா ஜயசூரிய வலி யுறுத்தியுள்ளார்.

# பெண்ணின் சங்கிலி அறுத்த இரு படையினர் மாட்டினர்

## ஒருவர் முல்லைத்தீவில் பணியாற்றுபவர்

கண்டி மற்றும் முல்லைத்தீவில் உள்ள இராணுவ முகாம்களில் கடமையாற்றும் இராணுவத்தினர் இருவர் மோட்டார் சைக்கி ளில் சென்று, வீதியில் பயணித்த பெண் ஒரு வரின் கழுத்தில் இருந்த ஒரு லட்சத்து எழு பதாயிரம் ரூபா பெறுமதியான தங்க நகையை அபகரித்த நிலையில் தலத்து ஓயா பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் முல்லைத்தீவு பகுதி யிலுள்ள இராணுவ முகாமிலும் மற்றை யவர் கண்டி இராணுவ முகாமிலும் பணி புரிபவர் எனத் தகவல் வெளியாகியுள்ள தாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தலத்துஓயா பகுதியைச் சேர்ந்த பெண் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த சந்தேக நபர்கள் இருவரும் மேற்படி பெண் ணின் நகையை கொள்ளையிட்டு தப்பிச் சென்ற நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# வட்டு. வைத்தியசாலைக்கு 6 லட்சம் ரூபா அன்பளிப்பு

## அவசியமான மருந்துகள் வாங்குவதற்காக



யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு 6 இலட்சத்து ஓராயிரம் ரூபா காசோலை இன்றையதினம் வழங்கி வைக்கப்பட்டது.

சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை யினர் ஊடாக கனடா சித்தங்கேணி ஒன்றி யத்தினர் இந்த நிதி உதவியினை வழங் கினர். வைத்தியசாலையில் நிலவும் மருந் துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முக மாக இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப் பட்டது.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை யின் பொறுப்பு வைத்திய அதிகாரி ரதினி காந்தநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சித்தங்கேணி ஆன்மீக அறக் கட்டளையினர், வைத்தியசாலை ஊழியர் கள் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கத் தினரும் கலந்துகொண்டனர்.



# திருமலை எண்ணெய்த் தாங்கிகள் வளாகத்துக்கு ஜனாதிபதி விஜயம்

திருகோணமலைஎண்ணெய்த் தாங்கி கட்டமைப்பை மீண்டும் செயற்படுத்தி தேசிய பொருளா தாரத்துடன் இணைப்பதற்கான துரித வேலைத்திட்டத்தை நடை முறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொறுப் பான அமைச்சர் மற்றும் அதிகாரி களுக்கு பணிப்புரை விடுத்தார்.

நேற்று முற்பகல் திருகோண மலை எண்ணெய்த் தாங்கிகள் வளாகம், இந்தியன் ஒயில் நிறுவன எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் களஞ்சிய முனையத்துக்கு ண் காணிப்பு விஜயத்தை மேற் கொண்டபோதே, ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பல தசாப்தங்களாகப் பயன் படுத்தப்படாத திருகோணமலை எண்ணெய்த் தாங்கிக் கட்ட மைப்பை நவீனமயப்படுத்தி, திருகோணமலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் களஞ்சிய முனையத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை முகாமைத்துவப் பணிப்பா ளர் மனோஜ் குப்தா வரவேற்றார்.

அவற்றின் செயற்பாடுகளைப் பார்வையிடச் சென்ற ஜனாதிப திக்கு, அந்த முனையத்தின் செயற் பாடுகள் தொடர்பிலும் சுருக்க மாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தியன் ஒயில் நிறுவனத் தின் மசகு எண்ணெய் கலக்கும் ஆலையையும் ஜனாதிபதி பார் வையிட்டார்.

வருடத்துக்கு 18 ஆயிரம் கிலோ லீற்றர் கொள்ளளவைக் கொண் டுள்ள இந்த ஆலை மூலம் நாட் டின் மசகு எண்ணெய்த் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

எண்ணெய்க்களஞ்சியமுனை யத்தில் அமைந்துள்ள அதிநவீன ஆய்வுகூடத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அதன் செயற்பாடு களைப் பார்வையிட்டதுடன், அண் மையில் மேம்படுத்தப்பட்டு ஆரம் பிக்கப்பட்ட இலங்கையின் முத லாவது உள்நாட்டு கிரீஸ் உற்பத்தி ஆலையையும் பார்வையிட்டார்.

வருடாந்தம் 3 ஆயிரம் மெற் றிக் டொன் கொள்ளளவைக் கொண்ட இந்த கிரீஸ் உற்பத்தி ஆலையானது இந்த நாட்டின் மொத்த கிரீஸ் தேவையையும் பூர்த்தி செய்வதோடு தற்போது கிரீஸ் இறக்குமதிக்காகச் செலவி டப்படும் அந்நியச் செலாவணி யைச் சேமிக்கும் திறனையும் கொண்டுள்ளது.

நாட்டின் வலுசக்தித் தேவை கள் எப்போதும் திறம்படப் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்து, எல்லா நேரங்களிலும் தொடர்ச் சியாகச் செயற்படும் இந்தியன் ஒயில் நிறுவனத்தின் பவுசர் நிரப்பு வளாகத்தின் வசதிகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

பின்னர் இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் இணைந்து முன்னெடுக்கும் 61 எண்ணெய்த் தாங்கிகளை உள்ள டக்கிய மேல் தாங்கி வளாகத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அதன் செயற்பாடுகளையும் பார்வை யிட்டார்.

இதேவேளை, இரண்டாம் உல கப் போரின் போது குண்டுத் தாக் குதலுக்குள்ளான எண்ணெய்த் தாங்கி வளாகத்தையும் ஜனாதி பதி பார்வையிட்டார்.

நெருக்கடியான காலப்பகுதி யில் நாட்டின் எரிபொருள் விநியோ கத்தை முறையாகப் பேணுவதற்கு இந்தியன் ஒயில் நிறுவனம் ஆற் றிய அர்ப்பணிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டி யதுடன், ஜனாதிபதியின் வரு கையை நினைவுகூரும் வகை யில் அவருக்கு நினைவுப் பரிசு ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான பிரமித பண்டார தென்னக்கோன், டி.வி.சானக்க, நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரள, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோ சகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இந்தியன் ஒயில் நிறுவனத்தின் சிரேஷ்ட உப தலைவர் பி. முகர்ஜி, உப தலைவர் பி.கே.மண்டல், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர் தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வாகனப் பதிவிலுள்ள குறைபாடுகள் நீங்கும்

மோட்டார் வாகனங்களை பதிவு செய்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத் ரம் வழங்குவது தொடர்பில் திருத்தங் களை மேற்கொள்ளத் துறைசார் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி களுக்கும் நிதி அமைச்சுக்கும் இடை யில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

மோட்டார் வாகனப் பதிவு, ஒழுங்கு முறை, சாரதி அனுமதிப்பத்திரம் வழங் கல் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள சீர்திருத் தங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டதாக அமைச்சர் ஷெஹான் சேம சிங்க தெரிவித்தார்.

# சந்தைப்படுத்தல் துறையில் வேலை தேடுபவரா நீங்கள்?

குறித்த துறையில் ஒரு வருட கால அனுபவமிருந்தால் விண்ணப்பிக்கலாம்

ஹேலிஸ் குழுமத்தைச் சேர்ந்த சோலார் பேனல்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு

## விற்பனைப் பிரதிநிதிகள்

இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

சிறந்த சலுகைகளுடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

*உங்கள் விண்ணப்பத்தை இன்றே Whatsapp செய்யுங்கள்*

**077 266 4320**

careers@heyleysfentosns.com

நேர்முகப் பரீட்சை 4 ஆம் திகதி மார்ச் மாதம் யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் உள்ள Hayleys Showroom இல் நடைபெறும்

**071 01 61 411**

s.ratheeshwaran@hayleyssolar.com


intel
AMD
hp Lenovo DELL
Hi-Res AUDIO
NVIDIA GEFORCE
NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North
LAPTOPS
Special OFFER
i3, i5, i7 12th GEN
Hp - Dell - Lenovo
2 OR 3 YEARS WARRANTY
Free Bag, Antivirus, 64GB Pen Drive, Mouse
Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk
JAFFNA 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. 077 766 7975 / 021 222 1121
KILINOCHCHI No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. 076 359 7610 / 021 228 5550
MANNAR No.208A, Hospital Road, Mannar. 076 359 4368 / 023 222 2500
NALIN IT EXCLUSIVE No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) 076 359 4359 / 021 221 0404
SERVICE CENTER 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. 077 766 7975 / 021 222 1121
HP WORLD 195/3, Parameswara Junction, Palaly Road, Jaffna. 076 359 4363 / 021 222 4994


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir




நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kālaikkathir

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 19 வெள்ளிக்கிழமை 03.03.2023 கதிர் 366

## தேர்தலுக்கான புதிய திகதி அடுத்த வாரம் வெளிவரும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதி அடுத்த வார தொடக்கத்தில் அறிவிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான புதிய திகதி இன்று அறிவிக்கப்படும் என கடந்த வாரம் அறிவித்திருந்தது ஆணைக்குழு. அது தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழு உறுப்பினர்கள் இன்று கூடினர். எனினும் தேர்தல் நிதியை நிறுத்து–வதற்கு எதிராக உயர் நீதிமன்றம் தடை உத்தரவு விதித்த பின்னணியில் தேர்தல் திகதியை முடிவு செய்வதை அவர்கள் தள்ளிவைத்தனர்.

நிதி அமைச்சின் செயலாளர், அரச அச்சக அதிகாரி, பொலிஸ் 2☞

# தேர்தல் நிதியை அரச அதிகாரிகள் விடுவிக்க மறுக்க முடியாதவாறு

# இடைக்காலத் தடை

## உயர் நீதிமன்றம் இன்று பிறப்பித்தது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து–வதற்கென நாடாளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை அரச அதிகாரிகள் விடுவிக்காது தடுப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது உயர் நீதிமன்றம்.

தேர்தலை நடத்தாமல் விடுவதென்பது மக்களின் கருத்துரிமைக்கு ஏற்படுத்தப்படும் தடை மட்டுமல்ல அதையும் தாண்டியது என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறது உயர் நீதிமன்றம். 2☞



## கிளிநொச்சியில் இ.போ.ச. இன்று பணிப் புறக்கணிப்பு

இலங்கைப் போக்கு–வரத்துச்சபையின் கிளிநொச்சிச் சாலைப் பணியாளர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் காலையில் பல சேவைகள் இடம்பெறவில்லை.

அலுவலகப் பணியாளர்களிற்கான பஸ் சேவையை இ.போ.ச. தொடங்கிய பின்னர் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இ.போ.ச. சாரதிகளுக்கும் இடையில் தொடர்ந்து முரண்பாடு ஏற்பட்டு வருகின்றது. தனியார் பேருந்து சேவையினரின் மிரட்டல்களைத் தொடர்ந்து இ.போ.ச. அலுவலகப் பணியாளர் சேவையை நிறுத்திவிட்டது.

எனினும் தனியார் துறையினர் தொடர்ந்து அச்சுறுத்தலாக செயற்பட்டு வருகின்றனர்.

நேற்றும் தனியார் துறை பஸ் ஒன்று, இ.போ.ச பஸ்ஸினை நடுவீதியில் வழிமறித்து மிரட்டல் விடுத்திருந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன.

அதனைக் கண்டித்தே இன்றைய பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது. .

பணிப்புறக்கணிப்பிற்கான காரணத்தை இ.போ.ச கிளிநொச்சிசாலைஊழியர்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிற்கு அறிவித்திருந்தனர்.

# மின் கட்டண அதிகரிப்பை எதிர்த்து யாழ். நகரில் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

மின்சாரக் கட்டண அதிகரிப்பை மீளப்பெற வலியுறுத்தியும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்கக் கோரியும் யாழ். நகரில் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

புதிய ஜனநாயக மார்க்சிச லெனிக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ் பேருந்து நிலையம் முன்பாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு குரல் எழுப்பிய போராட்டக்காரர்கள் சுமார் 2☞




## 11 மாணவர்கள் விபத்தில் காயம்

கிளிநொச்சி பளைப்பகுதியில் மாணவர்களை ஏற்றிச்சென்ற கப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 11 மாணவர் கள் காயமடைந்தனர்.

பாடசாலை இல்ல விளையாட்டுபோட்டி இடம்பெற்றுவரும் நிலையில் மரதன் போட்டிக்காக மாணவர்களை ஏற்றி சென்ற வாகனமே இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இயக்கச்சி பகுதியிலிருந்து பளை நோக்கி மரதன் ஓட்டத்திற்காக மாணவர்களைத் தொடக்கப் புள்ளிக்கு அழைத்துச்சென்ற போது விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த 11 மாணவர்களும் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி இன்று தொடங்கியது



(எஸ்.நிதர்ன்)

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று ஆளுநர் ஜீவன் தியாகராசாவினால் கோலாகலமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

நாளையும் மறுதினமும் தொடர்ந்து இடம்பெறும்.

“வடக்கிற்கான நுழைவாயில்” என்னும் தொனிப் பொருளில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சிமானது காலை 10.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

கண்காட்சியில் தென்னிலங்கை உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களினதும் 2☞

## மூதூர் தள வைத்தியசாலை பணியாளர்கள் போராட்டம்

திருகோணமலை, மூதூர் தள வைத்தியசாலையின் சிற் றூழியர்கள் இன்று வெள்ளிக்கிழமை மதியம் வைத்தியசாலைக்கு முன்னாள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார கட்டண அதிகரிப்பை இல்லாமல் செய், வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய், சம்பள அதிகரிப்பை வழங்கு, அதிகரித்த வட்டி வீதத்தை இல்லாமல் செய், புதிய வரிக் கொள்கையை உடன் நிறுத்து, மேலதிகநேர கொடுப்பனவை வழங்கு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.



## இலங்கை பக்தர்கள் வருகை கச்சதீவில் இம்முறை வீழ்ச்சி

அந்தோணியார் ஆலயத்திலிருந்து ந.லோகதயாளன்



யாழ்ப்பாணம், மார்.03

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையின் குறைந்தளவு பக்தர்களுடன் தொடங்கியது கச்சதீவு அந்தோணியார் தேவாலயத் திருவிழா. இம்முறை அதிக இந்திய யாத்திரிகர்கள் உற்சவத்தில் பங்கெடுத்தனர்.

கச்சதீவு புனித அந்தோணியாரின் வருடாந்த உற்சவத்திற்காக இரண்டு வருடங்களின் பின்னர் வழமை போன்று பக்தர்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இம்முறை இந்த உற்சவத்தில் 8 ஆயிரம் வரையிலான பக்தர்கள் வருவர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இலங்கையில் இருந்து 3 ஆயிரத்திற்கும் குறைவானோரே வருகை தந்துள்ளனர். இந்தியாவில் இருந்து 2 ஆயித்து 300 பேரும் வருகை தந்துள்ளனர்.

வருகை தந்துள்ள பக்தர்கள் சகிதம் இன்று மாலை கொடியேற்றத்துடன் உற்சவம் தொடங்கியது. நாளை காலை கொடி இறக்கத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

## பிரபாகரன் இறந்துவிட்டார் சொல்ஹேய்ம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர் இறந்துவிட்டனர் என்று ஐக்கிய நாடுகளின் சபையின் சுற்றுச்சூழல் திட்ட செயல் இயக்குனர் எரிக்சொல்ஹேய்ம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடந்த மிகவும் சோகமான போரின் ஒரு பகுதியாக பல தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மொத்த குடும்பத்துடன் இறந்துவிட்டார். தற்போது பிரபாகரன் உயிருடன் இல்லை.

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள்–இலங்கை அரசுக்கு இடையேயான அமைதிப் பேச்சுக்களின் போது நான் பிரபாகரனைப் பலமுறை சந்தித்திருக்கிறேன்.

பிரபாகரன் இறந்துவிட்டார், அவரது குடும்பத்தினர் இறந்துவிட்டனர். அது மிகவும் சோகமான நிகழ்வு. தற்போது இலங்கை எதிர்காலத்தை நோக்கிப் பயணித்து கொண்டிருக்கிறது. சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர்கள் ஒன்றாக இணைந்து வாழ விரும்புகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஓட்டோ – ட்ராக்டர் விபத்தில் அப்பாவிப் பெண் உயிரிழப்பு



(பாறுக் ஷிஹான்)

ஓட்டோவும் உழவு இயந்திரமும் மோதிய விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதி, காரைதீவு சண்முக வித்தியாலயத்திற்கு முன்னால் விபத்து இடம்பெற்றது. 2☞

## மின் கட்டண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனநாயக முக மூடியில் பாசிச ஆட்சியைத் தொடராதே, மின்கட்டண அதிகரிப்பை நிறுத்து, வதைக்காதே வதைக்காதே உழைக்கும் மக்களை வதைக்காதே, ரணில் சர்வாதிகார ஆட்சியே மக்களை வதைக்காதே, கல்வி கற்கும் மாணவர்களை இருட்டில் தள்ளாதே, குறை குறை பொருட்களின் விலைகளை குறை, ஜனநாயக உரிமைகளை பறிக்காதே, விற்காதே விற்காதே நாட்டு வளங்களை விற்காதே, சிதைக்காதே சிதைக்காதே மீனவர் வாழ்வைச் சிதைக்காதே, ஐஎம்எப் நிபந்தனைகளுக்கு அடிபணியாதே உள்ளிட்ட பல முழக்கங்களையும் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

போராட்டத்தில் கட்சியின் செயலாளர் சி.க.செந்தில்வேல் உட்பட கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## தேர்தலுக்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான தேர்தல் திகதி தொடர்பான கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் புதிய திகதி அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் அடுத்த வாரத்தின் முதல் சில நாட்களுக்குள் நடைபெறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்

## இடைக்காலத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயர் நீதிமன்றத்தில் இன்று இடம் பெற்ற அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின்போது நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீது நீதியரசர்கள் பிரீத்தி பத்மன் சுரசேன, ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னான்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணை நடத்தியது.

இதன்போதே நீதியரசர்கள் இந்த இடைக்காலத் தடை உத்தரவை வழங்கினார்கள். அத்துடன் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வது என்றும் உயர் நீதிமன்ற அமர்வு முடிவு செய்தது.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை, இந்த வழக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிநிதித்துவப்படுத்திய திறைசேரிச் செயலாளர் மற்றும் சட்ட மா அதிபரோ வேறு எந்த அரச அதிகாரியோ தடுப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிப்பதாக நீதியரசர்கள் அறிவித்தனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்காததன் மூலம், நிதியமைச்சின் செயலாளர் உட்பட பிரதிவாதிகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் தனது மனுவில் கோரியிருந்தார்

## ஓட்டோ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த மீராமுகைதீன் பாத்தும்மா (வயது 66) பரிதாபகரமாக உயிரிழந்தார். ஓட்டோவில் பயணம் செய்த மேலும் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் அம்பாறை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த பாத்தும்மா அக்கரைப்பற்றிலுள்ள தனது மகளின் வீட்டிற்குச் செல்லும் வழியில் விபத்து நிகழ்ந்துள்ளது.

அறுவடை செய்த நெல்லை ஏற்றிக்கொண்டு கல்முனை நோக்கி சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஆட்டோவும் வேகமாக மோதியதில் விபத்தில் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காட்சிக் கூடங்கள் பலவும் காட் சிப்படுத் தப்பட்டுள்ளன.

தொடக்க நிகழ்வில் வடக்கு ஆளுநர் ஜீவன் தியா கராசா, யாழ் இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெபாஸ்க ரன், யாழ் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபால சுந்தரன் , யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப் பாண தொழில்துறை மன்ற தலைவர் விக்னேஷ் எனப் பலர் கலந்து கொண்டிருந் தனர்.

நிகழ்வைத் தொடங்க ஆளுநர் வருவது தாமதமா னதைத் தொடர்ந்து நாடாவை வெட்டிக் கண்காட்சியை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்காமலேயே, தனக்கு நேரம் செல்வதாகக்கூறி இந்தியத் துணை தூவர் ராகேஷ் நட்ராஜ் பார்வையாளர் வாயில் ஊடாகச் சென்று கண்காட்சியைப் பார் வையிட்டுவிட்டுக் கிளம்பினார்.



# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நாடுகள் தேர்தலை பிற்போட்டதில்லை!

## நாலக கொடஹேவா கருத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பை சவாலுக்கு உட்படுத்தியுள்ளார். உள்ளூராட்சிமன்றத் தேர்தல்

விவகாரத்தில் நாட்டின் முத்துறைகளும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் தேர்தலை பிற்போடவில்லை என எதிர்க்கட்சிகளின் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித் தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நல்லாட்சி அரசாங்கத்தில் பிணைமுறி விநியோகத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என அப்போதைய

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் காரசாரமாக உரையாற்றி உண்மையை பொய் என நிரூபிக்க முயற்சித்து இறுதியில் தோல்வியடைந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிணைமுறி விநியோகத்தில் இருமுறை மோசடி இடம் பெற்றுள்ளது என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட பல்வேறு குழு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது.

தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு மத்திய வங்கி நிதி மோசடி ஒரு பிரதான காரணம் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறந்து விட்டார்.

கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை மாத்திரம் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளவில்லை. உலகில் அனைத்து நாடுகளும் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றன.

பொருளாதாரப் பாதிப்பு என்பதால் எந்த நாடும் தேர்தலைப் பிற்போடவில்லை. பூமியதிர்ச்சியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள துருக்கியில் மூன்று மாத காலத்துக்குள் தேர்தலை நடத்துவதாக அந்நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் நாட்டில் தேர்தல் என்பதொன்று கிடையாது, தேர்தல் அறிவிப்பு உத்தியோகபூர்வமானது அல்ல எனக் குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அரசமைப்பை சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விவகாரத்தால் நாட்டின் முத்துறைகளும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. ஜனாதிபதி

தேர்தல் இடம்பெறும் வரை எந்தத் தேர்தலையும் நடத்தப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு

ஜனாதிபதி செயற்படுகிறார்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் ஐக்கிய தேசி யக் கட்சியை முழுமையாகப் புறக்கணித்தார்கள்.

தற்போதைய பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இழந்த மக்கள் செல்வாக்கை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம் என ஜனாதிபதி கருதுவாராயின் அது ஒருபோதும் சாத்தியப்படாது என்பதை அவர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாடாளுமன்ற மட்டத்தில் முன்னெடுப் போம். – என்றார்.

# எதிர்வீரசிங்கம் கிளிநொச்சியில்

உயரம் பாய்தல் நிகழ்வில் இலங்கை யில் சாதனை படைத்த எதிர் வீரசிங்கம்,கிளி நொச்சிக்கு விஜயமொன்றைமேற்கொண்டுள்ளார்.கிளிநொச்சி ஐக்கிய விளையாட்டுகழக அனுசரணையில் பல்வேறு விளை யாட்டுக்களை ஊக்குவிப்பது இவரது வருகையின் முக்கிய நோக்கமாகும் என தங்க முத்து சத்தியமூர்த்தி தெரி வித்துள்ளார்.

குறிப்பாக எதிர்வரும் இரண்டு தினங்கள் கிளி நொச்சி மைதானத்தில் மாலை நேரங்களில் உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போன்ற விளையாட்டுகளுக்கான ஆலோ சனையை எதிர்வீரசிங்கம் வழங்குவார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். தனது முகநூல் பதிவினூடாக இதனை தெரிவித் துள்ளார்.

எதிர்வீரசிங்கம் 1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார்.

1958 ஆம் ஆண்டு ஆசிய போட்டியில் உயரம் பாய் தல் போட்டி யில் பங்குபற்றி தங் கப்பதக் கம் வென்றுள்ளார்.




# அம்பாறையில் தமிழர்களே அதீத வறுமையால் பாதிப்பு

## தலைமை கூட்டுறவு உத்தியோகத்தர் பரீட் சுட்டிக்காட்டு

(கு. தர்மேந்திரா)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களே அதிக வறுமையில் வாழ்கின்றனர் என்று இம் மாவட்டத்தின் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும், பொருளியல் நிபுணருமான எம். ஐ. எம்.பரீட் தெரிவித்தார்.

புதிய வாழ்வு நிறுவனத்தின் விவசாய ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஊக்குவிப்பு வேலை திட்டம் அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் முன்னெடுக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களை சேர்ந்த 150 வீட்டு தோட்ட முயற்சியாளர்கள் இவ்வேலை திட்டத்தின் பயனாளிகள் ஆவர்.

இவர்களில் ஒரு தொகையினருக்கு இரண்டாம் கட்ட ஊக்குவிப்பாக தலா 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான விதை பருப்பு பொதிகள் கடந்த வாரம் சமாசத்தின் கல்முனை தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சமாச தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடந்த வைபவத்தில் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராமகிருஷ்ணன், சமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர். இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய பரீட் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களோடு ஒப்பிடுகின்றபோது தமிழ் மக்கள் வறுமையில் உள்ளார்கள்.

இவர்களின் வாழ்வாதாரம், வருமானம், வாழ்க்கை தரம், பொருளாதாரம் ஆகிய–வற்றை உயர்த்துவதற்கு அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசம் அர்ப்பணிப்புடன் பாடுபடுகின்றது. நானும் என் சக உத்தியோகத்தர்களும் எம்மால் முடிந்த உச்ச பட்ச ஒத்துழைப்புகளை சமாசத்துக்கு வழங்குகின்றோம். அந்த வகையில்தான் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு சிபாரிசுகள் மேற்கொண்டு உள்ளோம்.

வீட்டு தோட்ட பயனாளிகள் ஊக்குவிப்புகளை பெறுவதோடு மாத்திரம் நின்று விடக்கூடாது. உண்மையிலேயே பயிர் வளர்த்து பயன் பெறுதல் வேண்டும். சுய மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். முன்னேற்றங்களைக் காண்பிக்க வேண்டும்.

பயனாளிகளின் வாழ்வாதாரம், வருமானம், வாழ்க்கை தரம், பொருளாதாரம் ஆகிய–வற்றில் முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும். அப்போதுதான் பங்களிப்பாளர்கள் திருப்தியும், மகிழ்ச்சியும் அடைவார்கள். தற்போது கிழக்கு மாகாண சபையில் விவசாயம், கால்நடை, கடற்றொழில், கூட்டுறவு போன்ற துறைகள் ஒரு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒரு அமைச்சு செயலாளர் நியமிக்கப்பட்டு உள்ளார். இது எமது மக்களுக்கு வரப்பிரசாதமான சூழல் ஆகும். இதன் மூலம் பெறக்கூடிய நன்மைகள், வழிகாட்டல் ஆகியவற்றையும் பெற்று தருவோம் – என்றார்.

# 111 கிலோ பீடி இலைகள் மாட்டின

புத்தளம் கற்பிட்டி, கண்டக்குடா பகுதியில் இன்று அதிகாலை 111 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

பீடி இலைகளை கடத்துவதாக கற்பிட்டி விஜய கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கண்டகுடா பகுதியில் தேடுதல் நடத்தியபோது பீடி இலைகளைக் கைவிட்டுச் சிலர் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பீடி இலைகளைக் கடத்து-வதற்குத் தயாராக நிறுத்தி வைத்திருந்த டிப்பர் வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக விஜய கடற்படையினர் தெரிவித்தனர்.

35 உரைப்பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் சுமார் ஆயிரத்து 111 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 2 கோடி ரூபாவிற்கும் அதிகம் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# அமெரிக்க டொலர் கையிருப்பு இலங்கையில் அதிகரித்துள்ளது

இலங்கையில் அமெரிக்க டொலர் கையிருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1.7 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட அந்நிய செலாவணி கையிருப்பு இந்த ஆண்டு பெப்ரவரி மாத முதல் வாரத்தில் 23.5 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

இதன்படி, அந்நிய செலா வணி கையிருப்பு 400 டொலர்களால் உயர்வடைந்துள்ளதாகவும் தற்பொழுது 2.1 பில்லியன் டொலர்கள் கையிருப்பில் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் உணவு பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதம் 94.9 வீதமாக காணப்பட்டதாகவும், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 60.1 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை 29 ஆயிரத்து 802 ஆகக் காணப்பட்டதாகவும் இந்த ஆண்டில் அந்த தொகை 261 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது எனவும் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 639 ஆக உயர்வடைந்துள்ளது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார தீர்மானங்களின் காரணமாக இந்த சாதகமான மாற்றம் நாட்டில் பதிவாகியுள்ளது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்றுபேர் கைது!

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுண்ஸ்விக் தோட்டப்பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை அகழ்வுக்குப்பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர். மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கு அமைய, குறித்த தோட்டப்பகுதியில் அனுமதிப்பத்திர மின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் மஸ் கெலியாவைச் சேர்ந்த 29,32 மற்றும் 65 ஆகிய வயதுடையவராவர். சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுத்து, பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## வடமாகாண ஆளுநர் ஜீவனை சந்தித்த பிரித்தானிய அதிகாரி



யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், வடக்கில் பல்வேறு அமைப்புகள், சிவில் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது வடக்கின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நகர்வுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக யுத்தத்துக்குப் பின்னரான வடக்கின் அபிவிருத்தியில் அரசாங்கங்களின் பங்களிப்புகள் மற்றும் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கின் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் பற்றியும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆளுநர் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், வடக்கு மக்களின் நல்லிணக்க நகர்வுகளில் சர்வதேசத்தின் பங்களிப்பு தொடர்பாகவும் பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம் எடுத்துரைத்தார்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரச தலைவர் இப்போது என்ன செய்வார்?

நாட்டில் தேர்தல் ஒன்றே இல்லை என்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது என்று தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த முடிவு சட்டபூர்வமானது அல்ல என்றும் நாடாளுமன்றத்தில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நாட்டின் அரசமைப்பைத் தனக்கேற்றவிதத்தில் வியாக்கியானப்படுத்தி தன்னையொரு சட்டமேதையாகவும் அவர் அந்த உரையின்போது விம்பப்படுத்தியிருந்தார்.

இவையெல்லாவற்றுக்கும் சேர்த்து நெற்றியடி கொடுக்கும் விதமாக உயர் நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அரச தலைவர் இல்லை என்று அறிவித்த தேர்தலை நடத்துவதற்கான நிதியை நிறுத்தக்கூடாது என்று அது அரச அதிகாரிகளுக்குத் தெளிவான கட்டளை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கச் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் சட்டவாளர் சாலிய பீரிஸ் நீதிமன்றத்தில் முற்பட்டு ஆணைக்குழுவின் நியாயங்களையும் எடுத்துக்கூறிய பின்னரே உயர் நீதிமன்றம் இந்த முடிவை அறிவித்திருக்கிறது. எனவே அரச தலைவர் கூறியதுபோன்று ஆணைக்குழுவின் முடிவு சட்டத்துக்குப் புறம்பானதல்ல என்பதும் தெளிவாகியிருக்கிறது.

தனக்கெதிரான அநீதிகளுக்காக ரணில் விக்கிரமசிங்க 2019 ஆம் ஆண்டு பல தடவைகள் நீதிமன்றத்தை நாடி நீதியை நிலைநாட்டியிருக்கிறார். அன்று அவருக்குப் பக்க பலமாக நின்ற பலரே இன்று அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் நீதி கேட்டு நிற்கிறார்கள். நீதிமன்றம் எப்போதும் போல நீதியைப் பக்க சார்பின்றி வழங்கி ரணிலின் மூக்கை உடைத்துள்ளது.

மக்களாட்சியை மலினப்படுத்தி, கேவலப்படுத்தி, நகைப்புக்குரியதாக்கி தன் விருப்பப்படி எதையும் செய்ய முடியும் என்று மமதையோடு கடந்த சில வாரங்களாகச் செயற்பட்ட அரச தலைவருக்கு நீதிமன்றம் மிகத் தரமான குட்டு வைத்துள்ளது. இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும் ரணிலால் தேர்தலை நிறுத்தி வைக்க முடியாது.

எதிர்ப்புக்களுக்கு மசிய மாட்டேன், இந்தத் தேர்தலை நடத்தினால் ஆட்சி மாறிவிடாது என்கிற வியாக்கியானங்களை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு இனியாவது ரணில் தனது பணியைச் சரிவர ஆற்ற முன்வரவேண்டும். அல்லது தனது பதவிக் காலத்தில் அவர் இதுபோன்று பல தடவைகள் உயர் நீதிமன்றத்திடம் குட்டுப்பட வேண்டியிருக்கும்.

### அரச வங்கி அதிகாரிகள் போராட்டத்தில் குதித்தார்

# கடன் உறுதிப்பத்திரங்களை பெற தனியார் வங்கிகளை அரசு நாடும்

## அமைச்சரவை தீர்மானம் என்கிறார் பந்துல

மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருளகளை இறக்குமதி செய்வதற்கான கடன் உறுதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு அரச வங்கிகளின் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் தடையாக இருக்குமானால், தனியார் வங்கிகளில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.



இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த முதலாம் திகதியன்று கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சின் அனுமதியுடன், மேற்குறித்த வங்கிக் கணக்குகள் தனியார் வங்கிகளில் ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக அரச வங்கிகள் ஊடான வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் செயற்படுத்தப்பட முடியாமல் போனால், கடன் உறுதிப் பத்திரம் உள்ளிட்ட அடிப்படை நடவடிக்கைகள் அனைத்தும் மந்த கதியில் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும் என விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஆழமா கக் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக அரச வங்கிகளின் நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்று மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உறுதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனால், நிதி அமைச்சின் அனுமதியுடன் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுறவுகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்டவை தனியார் நிறுவனங்களில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# விபத்துக்களைத் தடுக்க பொலிஸார் தனி திட்டம்

மேல் மாகாணத்தில் இடம்பெறுகின்ற வாகன விபத்துக்கள் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றைத் தடுப்பதற்காக வாகன சாரதிகள், பயணிகள் மற்றும் பாதசாரிகள் ஆகியோரை தெளிவுப்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை இலங்கை பொலிஸ் திணைக்களம் முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் ஆரம்பித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசணைக்கமைவாக நடத்தப்படுகின்ற இந்த விசேட வேலைத்திட்டம், இம்மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை மேல் மாகாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கியவாறு நடத்தப்படவுள்ளது.

இந்த விசேட வேலைத் திட்டத்தில், சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல், 18 வயதுக்குட்டபட்வர்கள் வாகனத்தைச் செலுத்துதல், வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல், விதி விதிமுறைகளை மீறுதல், சுற்றுவட்டம் ஒன்றில் ஏற்படுகின்ற தவறுகள், நடைபாதைகளில் ஏற்படுகின்ற தவறுகள், பஸ் நிறுத்தங்களில் ஏற்படுகின்ற தவறுகள், தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், மின் சமிக்ஞை விதிகளைப் பின்பற்றாமை உள்ளிட்டவை தொடர்பாக வாகன சாரதிகள், பயணிகள் மற்றம் பாதசாரிகள் ஆகியோருக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளன. இந்த வேலைத்திட்டங்களை உங்களது வேலைத் தளங்களில், பாடசாலை வான் சாரதிகள் சங்கங்களில், வர்த்தக மத்திய நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் மேல் மாகாண போக்குவரத்து பொலிஸ் பிரிவினரை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# சுகாதார அமைச்சராக பதவியை ஏற்க தயார்

## ராஜித அதிரடி அறிவிப்பு



சுகாதார அமைச்சர் பதவியை ஏற்கத் தயாரெனகளுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள் ளார்.

கொழும்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு சுகாதார அமைச்சர் பதவி கிடைத்தால், நாட்டை தற்போது ஏற்பட்டுள்ள துரதிஷ்டமான சூழ்நிலையில் இருந்து மீட்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

இந்த நேரத்தில் மக்களுக்குத் தேவை தேர்தல் அல்ல, உணவுதான் என கூறியுள்ளார்.

மேலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோது, எந்தவொரு அரசாங்கமும் தனது எதிர்கால நலன் கருதி அமைச்சர்களை நியமிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

### கணவருடன் பிரிட்டனில் சேர்ந்திருப்பதற்காக

# 6 வருடப் போராட்டத்தின் பின்னர் உரிமையை வென்ற தமிழ் பெண்

பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதாக அச்சுறுத்தப்பட்ட இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர், உள்துறை அலுவலகத்துடனான ஆறு ஆண்டுகாலப் போராட்டத்துக்குப் பின் பிரித்தானியாவில் வாழும் உரிமையை வென்றிருக்கிறார்.



இலங்கையிலிருந்து பிரித்தானியாவுக்கு வந்த ண்முகத்துக்கு (வயது - 74), 1994 ஆம் ஆண்டு அகதி நிலை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அவரது பிள்ளைகளும் அவரைப் பின்தொடர்ந்து பிரித்தானியா வர, அவர்களுக்கும் அகதி நிலை வழங்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு, கணவன் மனைவி விசாவில் பிரித்தானியா வந்த சுசிதா பாலசுப்ரமணியம் (வயது -66), தன் குடும்பத்துடன் இணைந்துகொண்டார்.

இந்நிலையில், சுசிதாவின் கணவரான ஷண்முகம் பணி ஓய்வு பெற்றதால், பிரித்தானியாவில் வாழ்வதற்கான நிதி நிலைமை அவர்களுக்கு இல்லாததால் சுசிதா தன் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் விட்டு விட்டு இலங்கைக்குத் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டார்.

ஷண்முகம் தனது ஓய்வூதியம் மற்றும் சேமிப்புக்காக தன் பங்களிப்பைச் செய்திருந்த நிலையிலும், உள்துறை அலுவலக விதிகள், ஸ்பொன்ஸர் செய்பவர் தனக்கு பணி மூலம் 18 ஆயிரத்து 600 பவுண்கள் வருவாய் இருப்பதாக காட்டவேண்டும் என்கின்றன. தங்கள் பிள்ளைகள் தங்களை ஆதரிப்பதாக தம்பதியர் வாதிட்டும் அதை உள்துறை அலுவலகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

2016 ஆம் ஆண்டு தனது விசாவை புதுப்பிக்க விண்ணப்பம் செய்தார் சுசிதா. ஆனால், அவரது கணவர் ஓய்வு பெற்றதைக் காரணம் காட்டி அவரது விண்ணப்பம் உள்துறை அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டது.

அதை எதிர்த்து 2018ஆம் ஆண்டு ஒருமுறையும், பின்னர் 2021ஆம் ஆண்டு ஒருமுறையும் மேல்முறையீடு செய்து, நிராகரிப்பையே சந்தித்து, பின் 2022ஆம் ஆண்டு மேல்முறையீட்டு நீதிமன்றத்தை அணுக, அந் நீதிமன்றம் உள்துறைச் செயலர் தன் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என உத்தரவிட்டது.

தற்போது, அதாவது, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், பிரித்தானியாவில் தங்கியிருக்க சுசிதாவுக்கு உள்துறை அலுவலகம் எழுதியுள்ள கடிதத்தில், பிரித்தானியாவில் தங்கியிருக்க அவருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட போராட்டத்துக்குப் பின் தன் குடும்பத்துடன் தங்கியிருக்க அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து,

தனக்கு நீதி கிடைத்துள்ளதாகவும், தனது தூக்கமில்லா இரவுகள் முடிந்துபோனதாகவும், தெரிவித்துள்ள சுசிதா, தான் இப்போதுதான் நிம்மதியாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு 4 பேரை அனுப்பியது ஸ்பேஸ் எக்ஸ்



அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரக நாடுகளைச் சோந்த 4 விண்வெளி வீரர்களை, பிரபல தொழிலதிபா எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சாவதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பியுள்ளது.

அந்த நாட்டின் ஃபுளோரிடா மாகாணம், கேப் கனாவெரல் நகரிலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து, ஸ்பேஸ்எக்ஸின் ஃபால்கன் ரொக்கெட் மூலம் வியாழக்கிழமை அனுப்பட்ட டிராகன் விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இன்று இணைக் கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் ஸ்டீஃபன் போவன் மற்றும் வாரன் ஹோபாக், ரஷ்யாவைச் சோந்த ஆண்ட்ரே ஃபெத்யேவ், ஐக்கிய அரபு அமீரகத்தின் அல்-நெயாடி ஆகியோா அந்த விண்கலம் மூலம் சாவதேச விண்வெளி நிலையம் செல்கின்றனா.

அங்கு ஏற்கெனவே தங்கி ஆய்வுகளை மேற்கொண்டு வந்த அமெரிக்காவின் ஃபிராங்க் ரூபியோ, ரஷ்யாவின் சொகேய் ப்ரோகோபியேவ் மற்றும் டிமித்ரி பீட்டலின் ஆகிய மூவருக்கு பதிலாக அவர்கள் ஆய்வுகளை மேற்கொள்வர்.

முன்னதாக, அந்த மூவரையும் ஆய்வு நிலையத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பரில் அழைத்து வந்த ரஷ்யாவின் சோயுஸ்-எம்எஸ்22 விண்கலத்தில் விண்துகள் மோதி கசிவு ஏற்பட்டதால், அதன் மூலம் அவாகளால் பூமி திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால், திட்டமிட்ட ஆறு மாதங்களுக்கு மேல் அவாகள் ஆய்வு நிலையத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவாகளைபூமிக்குஅழைத்துவருவதற்காக, சோயுஸ்-எம்எஸ் 23 விண்கலம் கடந்த வாரம் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வுகளை தொடாந்து மேற்கொள்வதற்காக 4 வீராகளை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தற்போது அனுப்பியுள்ளது.

அந்த 4 பேரில் அல்-நெயாடி விண்வெளிக்குச் செல்லும் 2ஆவது ஐக்கிய அரபு அமீரக நாட்டவர் ஆவர்.

அத்துடன், அந்த நாட்டிலிருந்து சென்று சாவதேச விண்வெளி நிலையத்தில் மாதக் கணக்கில் தங்கப் போகும் முதல் விண்வெளி வீரா என்ற பெருமையையும் அவர் பெறுகிறார்.

# கிரீஸ் தொடர்ந்து விபத்து உயிரிழப்பு 57ஆக உயர்வு



தென்கிழக்கு ஐரோப்பிய நாடான கிரீஸில் சரக்கு ரயிலுடன் பயணிகள் ரயில் நேருக்கு நோ மோதி ஏற்பட்ட பயங்கர விபத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்துள்ளது.

ஏதென்ஸிலிருந்து ஹெலெனிக் ட்ரெயின் நிறுவனத்தைச் சேர்ந்த பயணிகள் ரயில் உள்ளூா நேரப்படி செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணிக்கு புறப்பட்டது. 350 பயணிகளுடன் அந்த ரயில் தாமதமாகப் புறப்பட்டது.

இந்த நிலையில், தெஸாலோனிகி நகரிலிருந்து லரிஸா நகரை நோக்கி ஏராளமான கொள்கலன் களுடன் சரக்கு ரயில் ஒன்று வந்து கொண்டிருந்தது.

அந்த இரு ரயில்களும் ஏதென்ஸ்-தெஸாலோனிகி ரயில் தடத்தில் டெம்பி ஊராட்சிப் பகுதியில் இரவு 11.24 மணிக்கு நேருக்கு நோ மோதிக் கொண்டன.

இந்த பயங்கர விபத்தில் 36 போ உயிரிழந்தனர். சுமார் 85 பேர் காயமடைந்தனா. அவாகளில் சுமாா 66 போ மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தின்போது பயணிகள் ரயிலில் இருந்த மேலும் 50 முதல் 60 பேரைக் காணவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனா.

இந்த விபத்தில் பயணிகள் ரயிலின் முதல் 4 பெட்டிகள் தடம் புரண்டதாகவும், முதல் 2 பெட்டிகள் தீப்பிடித்து ஏறத்தாழ முற்றிலும் அழிந்துபோனதாகவும் அதிகாரிகள் கூறினா.

முதல் பெட்டிகளில் பற்றிய தீ, அடுத்தடுத்த பெட்டிகளுக்கும் பரவியது. சுமார் 150 தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மீட்புப் பணிகளில் 40 அவசரக்கால வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. மீட்புப் பணிகளில் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இந்த விபத்து தொடர்பாக லரிஸா நகருக்கு அருகே உள்ள ஒரு ரயில் நிலையத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக்குப் பொறுப்பேற்று போக்கு-வரத்துத் துறை அமைச்சர் கோஸ்டாஸ் கரமான்லிஸ் பதவி விலகியுள்ளார்.

இந்நிலையில், ரயில் விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்துள்ளது.

ரயில் விபத்துக்கு ரயில்வே ஊழியர்களின் அலட்சியமே காரணம் எனக் கூறி ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டோர் மீது கண்ணீர்புகை குண்டுகளை வீசி பொலிஸார் விரட்டி அடித்தனர்.

கிரீஸ் வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான ரயில் விபத்து இது எனக் குறிப்பிடப்படுகின்றது.



# பாக். படையினரின் உணவும் குறைப்பு

பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் எரிபொருள், உணவுப் பொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது. அங்கு முப்படையினருக்கும் உணவளிக்க முடியாத நிலையில் அவர்களின் சாப்பாடு இரண்டு நேரத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் அரசு ஊழியர்களின் சம்பளம் குறைப்பு, வெளிநாட்டு தூதரகங்களின் எண்ணிக்கை குறைப்பு, உளவு அமைப்புகளுக்கான நிதி குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இதனால் அரசு நிர்வாகமே திணறிவருகின்றது..

இந்நிலையில், பாகிஸ்தான் படைத்துறை உணவகங்களிலும் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வீரர்களுக்கு ஒரு நாளைக்கு 2 வேளை உணவுகூட முறையாக வழங்க முடியவில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து பீல்டு கமாண்டர்கள் குவார்ட்டர் மாஸ்டர் ஜெனரல் அலுவலகத்துக்கு கடிதம் எழுதி உள்ளனர். இதையடுத்து, உணவுப் பொருள் விநியோகம் மற்றும் சரக்கு போக்குவரத்து பிரச்சினை தொடர்பாக சரக்குப் போக்குவரத்து தலைமை அதிகாரி மற்றும் ராணுவ இயக்குநர் ஜெனரல் ஆகியோருடன் ராணுவ அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

# இந்தோனேசியாவில் இன்று நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் மேற்கு சுமத்ரா மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதா புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று காலை 6.05 மணியளவில் பெசிசிர் செலாடன் (தென் கடற்கரை) மாவட்டத்திலிருந்து தென்கிழக்கே 36 கிமீ தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், 82 கிமீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் நிலைகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஆழிப்பேரலைக்கான எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. இந்த நிலநடுக்கமானது அருகில் உள்ள ஜம்பி மாகாணத்திலும் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் உயிரிழப்புகளும், சேதங்களும் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

# ஜெர்மன் மக்களில் 23% புலம்பெயர்ந்தோர்



ஜொமனி மக்கள் எண்ணிக்கையில் 23 சதவீதம் போ 1950ஆம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்து அந்த நாட்டுக்கு வந்தவாகள் அல்லது புலம்பெயாந்தவாகளின் குழந்தைகள் என ஜொமனி மத்திய புள்ளியியல் அலுவலகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

முதல் முறையாக குடியுரிமை அடிப்படையில் மட்டுமன்றி, புலம்பெயாந்தவாகளின் எண்ணிக்கை அடிப்படையில் நாட்டின் மக்கள் எண்ணிக்கையை புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், நாட்டின் மொத்த மக்கள் தொகையான 8.3 கோடியில் 1.89 கோடி போ புலம்பெயாந்து ஜொமனியில் குடியேறியவாகள் ஆவர்.

இவாகளில் 17.3 சதவீதம் போ முதல் தலைமுறை புலம்பெயாந்தவர்கள் எனும் அடிப்படையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சராசரியான 10.6 சதவீதத்தைவிட இது அதிகம்.

மேலும், 37 லட்சம் பேரின் பெற்றோரில் யாராவது ஒருவா புலம்பெயர்ந்தவர் மற்றொருவர் ஜெர்மனியைப் பூர்விகமாகக் கொண்டவர்.

2021ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ரஷ்யாவின் படையெடுப்பால் உக்ரைனிலிருந்து ஜெர்மனியில் தஞ்சமடைந்துள்ள 10 லட்சம் போ இதில் சோக்கப்படவில்லை.

# ரஷ்யாவுக்குச் சீனா ஆயுதங்களை வழங்கக்கூடாது என்கிறது ஜெர்மனி

உக்ரைனுடனான போரில் பயன்படுத்த ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் அனுப்பக்கூடாது என்று சீனாவிடம் ஜொமனி பிரதமா ஓலாஃப் ஷோல்ஸ் வலியுறுத்தியுள்ளாா.

இது குறித்து ஜொமனி நாடாளுமன்றத்தில் அவா வியாழக்கிழமை பேசியதாவது:

தங்களுக்கு ரஷ்யாவிடம் இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர சீனா முயற்சிக்க வேண்டும். உக்ரைனில் ஆக்கிரமித்துள்ள இடங்களில் இருந்து வெளியேற ரஷ்யாவுக்கு சீனா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதற்குப் பதிலாக, ஆக்கிரமிப்பு சக்தியான ரஷ்யாவுக்கு உதவும் வகையில் அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை சீனா முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஜொமனி ராணுவ உதவிகளையும், நிவாரண உதவிகளையும் தொடர்ந்து அளிக்கும்.

ரஷ்யாவிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் ஜெர்மனி உக்ரைனுக்கு வழங்கும்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷ்யாவுடன் உக்ரைன் சமரசம் செய்துகொள்ளவேண்டும் என்று சிலா வலியுறுத்துகின்றனா.

அமைதி என்பது மிகப் பலம் வாய்ந்த அண்டை நாட்டிடம் அடிபணிந்து பெறுவதல்ல. தன்னைத் தானே பாதுகாத்துக்கொள்ளத் தவறினால் அது உக்ரைனின் முடிவுக்கு வழிவகுக்கும் – என்றாா ஓலாஃப் ஷால்ஸ்.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி படையெடுத்தது. இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்காவும், ஜொமனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் ஆயுத உதவிகளை அளித்து வருகின்றன.

உக்ரைனில் தாக்குதல் நடத்துவதற்காக ரஷ்யாவுக்கும் ஈரான் தனது ஆளில்லா விமானங்களுக்கான குண்டுகளை அளித்துவருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. போரில் அந்த ஆளில்லா விமானங்கள் ரஷ்யாவுக்கு கூடுதல் பலம் அளித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையே, ரஷ்யாவுடன் மிக நெருங்கிய நட்பைப் பேணி வரும் மற்றொரு ராணுவ சக்தியான சீனா உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் அனுப்பக்கூடும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அச்சம் தெரிவித்து வருகின்றன.

இந்தச் சூழலில், ரஷ்யாவுக்கு ஆயுதங்கள் அனுப்பக்கூடாது என்று சீனாவிடம் ஜொமனி பிரதமா வலியுறுத்தியுள்ளாா.

# 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வென்றது ஆஸ்திரேலியா



இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் பெரு வெற்றி பெற்றது ஆஸ்திரேலிய அணி. 76 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, கவாஜாவை தொடக்கத்திலேயே இழந்தாலும் ஹெட்டும் லபுனேும் இணைந்து ஒரு நாள் ஆட்டம் போன்று விளாசி ஆட்டத்தை விரைவில் முடித்து வைத்தனர்.

இந்தூரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் இரண்டரை நாட்களுக்குள் முடிவுக்கு வந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இந்திய அணியில் கே.எல். ராகுல், மிக்குப் பதிலாக ஷுப்மன் கில், உமேஷ் யாதவ் ஆகியோரும் ஆஸி. அணியில் கம்மின்ஸ், வார்னருக்குப் பதிலாக மிட்செல் ஸ்டார்க், கிரீன் ஆகியோரும் இடம்பெற்றார்கள்.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 109 ஓட்டங்களும் 2ஆவது இன்னிங்ஸில் 163 ஓட்டங்களும் மட்டுமே எடுத்தது. ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டு நாட்களுக்குள் இரு அணிகளும் மூன்று இன்னிங்ஸ்களை ஆடி முடித்திருந்தன. ஆஸி. அணி வெற்றி பெற 76 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இன்று ஆட்டம் தொடங்கியவுடன் புதிய பந்திலேயே சுழல் தாக்குதலை தீவிரப்படுத்தினார் இந்திய அணித் தலைவர். புதிய பந்தில் நன்கு சுழற்றக்கூடியவரான அஸ்வினின் முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே கைமேல் பயன் கிடைத்தது. கவாஜா வீழ்ந்தார். ஆட்டம் தொடங்கி இரண்டாவது பந்தில் அவர் ஆட்டமிழந்தார்.

அதன்பிறகு ஹெட்டும் லபுனேும் பொறுப்புடன் விளையாடி மேலும் இலக்குகள் சரியாமல் பார்த்துக் கொண்டார்கள். அத்தோடு இந்திய சுழற்பந்துவீச்சாளர்கள் என்கிற பயத்தைக் கடந்து ஒரு நாள் ஆட்டங்களில் ஆடுவதைப் போன்று பந்துக்கு ஓட்டங்கள் என்கிற கணக்கில் துடுப்பைச் சுழரவிட்டார்கள். இறுதியில் ஆஸ்திரேலிய அணி, 18.5 பந்துப் பரிமாற்றங்களிலேயே தேவையான ஓட்டங்களைப் பெற்றது. 1 இலக்கு இழப்புக்கு 78 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியை அடைந்தது. ஹெட் 49, லபுனே 28 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இந்த டெஸ்டில் மொத்தமாக 11 விக்கெட்டுகள் எடுத்த லயன், ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.

ஆஸி அணித் தலைவர் பாட் கமின்ஸ் இந்த டெஸ்ட்டில் இல்லாமல் போனதும் ஸ்டீவ் ஸ்மித் ஆஸ்திரேலிய அணித் தலைவராக வழி நடத்தியதும் ஆஸ்திரேலிய அணிக்கு மறைமுக ஆசீர்வாதமாகி விட்டது. ஸ்மித் சிறந்த தலைவர், ஸ்மித்தின் களவியூகம் பந்துவீச்சு மாற்றம், இந்திய துடுப்பாளர்களின் உத்தி குறித்த ஸ்மித்தின் அறிவு ஆகியவை இந்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளது.

இருந்தாலும் மூன்றாது டெஸ்ட்டுக்கான பிட்ச் சுத்த மோசம் என்ற கண்டனங்கள் இம்முறை இந்தியாவில் இருந்தே கிளம்பியுள்ளன. இதுவரை இந்தியாவில் மோசமான பிட்சுகளே விளையாடக் கிடைக்கின்றன என்று ஆஸ்திரேலியர்கள்தான் விமர்சனம் செய்து வந்தனர். அப்போதெல்லாம் வெற்றி பெற்ற திமிரில் எள்ளி நகையாடி வந்த இந்திய ஊடகங்கள், இந்தத் தோல்வியுடன் இந்தியப் பிட்சகள் மோசமானவை என்று தாமும் விமர்சிக்கத் தொடங்கிவிட்டன.

முதல் நாளில் இரு அணிகளும் 265 ஓட்டகளை எடுப்பதற்குள் 14 விக்கெட்டுகள் பறிபோயின. 2ஆம் நாளான நேற்று 16 விக்கெட்டுகள் 204 ஓட்டங்களுக்குக் பறந்தன. நேதன் லயன் தன் வாழ்நாளின் சிறந்த டெஸ்ட் பந்துவீச்சை நிகழ்த்தினார். 8/63 என்று அசத்தியதில் பிட்சின் பங்கும் முக்கியமானது. இந்திய துடுப்பாளர்களுக்கு ஸ்பின் பிட்சில் ஆடுவதற்கான கால் நகர்த்தல்கள், உத்திகள், பொறுமை என்று எதுவும் இல்லாமையும் இந்த மோசமான தோல்விக்குக் காரணமாக அமைந்தன. 3ஆவது டெஸ்டை வென்றதன் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு ஆஸ்திரேலிய அணி தகுதி பெற்றுள்ளது. டெஸ்ட் தொடரில் 2-1 என இந்தியா முன்னிலை வகிக்கிறது.

4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட், ஆமதாபாத்தில் மார்ச் 9 அன்று தொடங்குகிறது.

## என்ன விரும்பினோமோ அதை ஆடவில்லை

### இந்திய அணித் தலைவர் தெரிவிப்பு



நாங்கள் விரும்பியவாறு நாங்கள் விளையாடவில்லை என்று இந்திய அணியின் தோல்விக்குக் காரணம் தெரிவித்துள்ளார் அணித் தலைவர் ரோஹித் சர்மா.

இந்தூரில் நடந்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வி அடைந்தமை குறித்து அவர் தெரிவித்ததாவது:

நீங்கள் ஒரு டெஸ்டில் தோற்றால் பலவியங்கள் உங்கள் வழிக்கு வரவில்லை என்று அர்த்தம். முதல் இன்னிங்ஸில் நாங்கள் சரியாகத் துடடுப்பேடுத்தாடவில்லை. முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களை எடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்துள்ளோம். அவர்கள் 80-90 ரன்கள் முன்னிலை பெற்றபோதும் நன்கு துடுப்பெடுத்தாட வேண்டியிருந்தது. அதுவும் நடக்கவில்லை.

ஆஸி. பந்துவீச்சாளர்களின் முக்கியமாக லயனின் பங்களிப்பை நாங்கள் சாதாரணமாக எண்ணவில்லை. ஆனால் ஆஸி. அணி பந்துவீச்சாளர்கள் ஒரே இடத்தில் பந்துவீசி ஆதாயம் பெறுவதற்கு வழிவகுத்து விட்டோம். நாங்கள் துணிச்சலுடன் விளையாடியிருக்க வேண்டும். ஆனால் அப்படி விளையாடவில்லை.

முதல் இரு டெஸ்டுகளில் நன்கு விளையாடினோம். இதுபோல டெஸ்டில் தோல்வியடைவது சிலசமயம் நடைபெறும். சில வீரர்கள் நன்கு விளையாட வேண்டும் என விரும்பினோம். அப்படி நடக்கவில்லை. நாங்கள் விரும்பியவாறு நாங்கள் விளையாடவில்லை -என்றார்.

## முப்பெரும் நாடுகளின் வீரர்களைத் தவிர்த்து மற்றைய கிரிக்கெட் வீரர்களின் மனவருத்தம்

தமக்கு மூத்தவர்களின் சாதனையுடன் தமது அடைவுகளை ஒப்பிட முடியாது என்று தெரிவித்திருக்கின்றனர் மேற்கிந்திய மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள். முந்தைய தலைமுறைகளின் சிறந்த வீரர்கள் விளையாடியபோது இருந்த நிலை இப்போது தமக்கு இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெஸ்ட் இண்டீஸ் உள்ளிட்ட நலிந்து வரும் அணிகள் அதிகம் டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதில்லை ஒப்பு நோக்கும்போது முப்பெரும் மூர்த்திகளான இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள்தான் அதிகம் டெஸ்ட் போட்டிகளில் ஆடுகின்றன. அப்படியிருக்கும்போது மூத்த வீரர்களின் சாதனைக்கான வாய்ப்புக்கும் எமக்கும் பெரிய இடைவெளி இருக்கின்றது என மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜேசன் ஹோல்டர் தெரிவித்துள்ளார்.

கேரி சோபர்ஸுக்குப் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் போட்டிகளில் 150 விக்கெட்டுகளையும், 2500 ஓட்டங்களையும் எடுத்த சகலதுறை ஆட்டக்காரராக ஹோல்டர் அறியப்படுகிறார்.

இது தொடர்பாக ஜேசன் ஹோல்டர் தெரிவித்ததாவது:

இப்போது கிரிக்கெட் உலகம் போய்க் கொண்டிருக்கும் போக்கைப் பார்க்கும்போது மூன்று பெரும் அணிகளான இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து தவிர மற்ற அணிகள் டெஸ்ட் போட்டிகளில் மிகவும் அரிதாகவே ஆடுகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக சராசரி 6-8 டெஸ்ட் போட்டிகளிலேயே மே.இ.தீவுகள் அணி ஆடியுள்ளது. இந்த ஆண்டு 6 போட்டிகளில் ஆடியுள்ளோம். அடுத்த ஆண்டு 6 போட்டிகள். வருடத்தில் நடக்கும் எல்லாப் போட்டிகளிலுமே ஒருவர் ஆடினால்தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 போட்டிகள் என்ற மைல்கல்லை எட்ட முடியும்.



நாங்கள் கிரெக் பிராத்வெய்ட்டை பார்த்து வருகின்றோம். 2011இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமான அவர் இதுவரை 83 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ளார். இன்னும் சதம் எடுக்க வில்லை. ஜோ ரூட் ஆடத் தொடங்கியது முதலே பிராத்வெய்ட்டும் விளையாடி வருகிறார். ஆனால் ஜோ ரூட் 130 டெஸ்ட்கள் பக்கம் ஆடிவிட்டார். இது எதைக் காட்டுகின்றது என்றால் இங்கிலாந்து எங்களைவிட எத் தனை டெஸ்ட்கள் அதிகம் ஆடுகின்றன என்பதைத்தான். எனவே சாதிப்பதென்பது எங்கள் கையில் இல்லை. எங்கள் கட்டுப்பாட் டில் இல்லாத வியத்தை பேசி என்ன பயன்? எனவே கிடைக்கும் போட்டிகளில் நாம் நம் வாய்ப்பை அதிகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்கிறார்.

இதையேதான் தென் ஆப்பிரிக்கா வேகப்பந்து வீச்சாளரான ஆன்ரிச் நார்க்கியாவும் கூறுகின்றார், ஆண்டுக்கு 4 டெஸ்ட் போட்டிகளில் மட்டும் ஆடினால் மைல்கல், சாதனைகள் பற்றி எங்கு சிந்திக்க முடியும்? நான் 50 டெஸ்ட் போட்டிகளில் ஆட முடியுமா என்றே தெரியவில்லை. அப்படி 50 டெஸ்ட்டில் ஆட வேண்டுமெனில் எனக்கு இன்னும் 7 ஆண்டுகள் தேவை.

சில நாடுகள் அடுத்த சில மாதங்களில் 20 டெஸ்ட் போட்டிகளில் ஆடுகின்றன. எனவே கடந்த கால சிறந்த மனிதர்களுடன் இப்போது எங்களை ஒப்பிட முடியாது, அவர்கள் அதிகம் டெஸ்ட் போட்டிகளில் ஆடினார்கள். ஆண்டுக்கு எங்களுக்கு 4 போட்டிகள் அல்லது 8 போட்டிகள்தான் கிடைக்கின்றன - என்கிறார்.

## இலங்கையை நம்பியிருக்கும் இந்தியா

எதிர்வரும் ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணி பங்கேற்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலிரு ஆட்டங்களிலும் அடுத்தடுத்து இந்தியா பெரு வெற்றியைப் பெற்றபோது அது டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்திற்குச் சென்றுவிடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. மூன்றாவது டெஸ்ட் தோல்வியுடன் அது தகர்ந்துவிட்டது.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்தூர் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வியை தழுவியுள்ள நிலையில், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதியில் அது பங்கேற்பதென்பது இலங்கையின் கைகளில் இப்போது தங்கியுள்ளது. .

4 போட்டிகள் கொண்ட போர்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரின் கடைசிப் போட்டி மார்ச் 13ஆம் தேதி அகமதாபாத் நகரில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றால் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெறும். அதேநேரத்தில் இந்த தொடரையும் 3-1 என்ற கணக்கில் வெல்லும்.

அதுவே, ஆஸ்திரேலிய அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் 2-2 என தொடர் சமனில் நிறைவடையும். அல்லது அகமாதாபாத் போட்டி சமனில் முடிந்தால் 2-1 என தொடரை இந்தியா வெல்லும். இதனால், இறுதிப் போட்டியில் விளையாடும் பந்தயத்தில் உள்ள மற்றொரு அணியான இலங்கைக்கு ஒரு வாய்ப்பு உருவாகும். இலங்கை, நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். தோல்வியடைந்தால் இந்தியா அந்த வாய்ப்பைப் பெறும்.

## ஐபிஎல் பயிற்சிக்காக சென்னை வந்தார் தோனி

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் எம்.எஸ். தோனி வியாழக்கிழமை இரவு சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மகளிர் ஐபிஎல் தொடர் மார்ச் 26ஆம் திகதி முடிவடையும் நிலையில் நான்கு நாட்கள் இடைவெளியில் ஆடவர் ஐபிஎல் தொடர் தொடங்குகிறது.

ஆடவர் ஐபிஎல் கிரிக்கெட் திருவிழா மார்ச் 31ஆம் திகதி தொடங்கி மே 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு ஐபிஎல் போட்டி, சென்னை அணியின் தலைவர் தோனியின் கடைசிப் பருவம் என்பதால், ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தமுறை முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நடப்பு சாம்பியனான குஜராத் டைட்டன்ஸ் அணியை எதிர் கொள்கிறது. அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகிறது.

தனது கடைசி ஐபிஎல் போட்டி சென்னையில்தான் இருக்கும் என்று தோனி வெளிப்படையாக அறிவித்திருந்தார். இந்நிலையில், அவர் சென்னைக்கு பயிற்சிக்காக வருகை தந்துள்ளார்.

அம்பத்திராயுடு, தீபக்சஹார், ரஹானே ஆகியோர் சென்னையில் ஏற்கெனவே பயிற்சியை தொடங்கியுள்ளனர். அவர்களுடன் தோனியும் பயிற்சியில் ஈடுபடவுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2023 இல் வெளியிடப்பெற்றது.